ஞானரதம்

# இஸ்லாமிய திருமறை

## திரு குர்-ஆன் விளக்க உரை

முதல் இரண்டு பாகங்கள்

ஆசிரியர்
அப்பாஸ் இப்ராஹீம்

விலை ரூ 1-50

Q7:21
N78
719

83

# கவிஞரின் அறிக்கை

இஸ்லாமிய நண்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, திருகுர்—ஆன் உரை எழுதுவதை நான் நிறுத்தி விட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை வெளியிட விரும்பியவரும், ஞானரதம் ஆசிரியருமான என் அருமை நண்பர் அப்பாஸ் இப்ராஹீம், M.A. அவர்கள், தானே அதனை எழுதி வெளியிடுவார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாமிய திருமறையின் தமிழுரையை துவக்கி வைத்ததோடு அப்பணியை முடித்துக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

தேதி: 30-12-1977



இறைவனின் அன்பும் கருணையும் வேண்டி கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்ட திருப்பணி இது. ஆனால் இஸ்லாமிய நண்பர்கள் சிலரின் ஸௌஜன்யமான உறவை முறித்துக்கொண்டு இப்பணியைத் தொடர அவர் விரும்பவில்லை. அதனால் அவர் துவக்கி வைத்து, என்மீது நம்பிக்கை வைத்துத் தந்துள்ள இப்பணியைத் தொடர்ந்து முடிக்கும் பொறுப்பை இறைவன்மீது பாரத்தைப் போட்டு ஏற்கிறேன். மாதந்தோறும் ஞானரதத்தில் இப்பணி தொடரும்.

அன்பு

**அப்பாஸ் இப்ராஹீம்**

ஆசிரியர், ஞானரதம்.

தேதி: 30-12-1977.

# இஸ்லாமிய திருமறை

## திருகுர்—ஆன் விளக்கவுரை

முதல் இரண்டு பாகங்கள்

அப்பாஸ் இப்ராஹீம், M.A.

ஞானரதம் வெளியீடு
58, நாலாவது மெயின்ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை 600 020.
தொலைபேசி எண். 412074

GNANARATHAM :

January, 1978

Thirumarai Varisai—1

# ISLAMIYA THIRUMARAI–Part I & II

**Price : Rs. 1–50**

Printed at Nathan & Co., Madras–600 042. for Gnanaratham Atchagham No. 1-A, L. D. G. Road, Madras–600 015. & Published by I. Thaj Nisha, from 58, 4th Main Road, Gandhi Nagar, Madras–600 020.

Editor, Gnanaratham : **Abbas Ibrahim** M. A.
(Deva Chithrabharathi)

# முன்னேட்டம்

ஞானரதம் வெளியீடாக, திருமறை வரிசையில் முதலாவதாக, திருகுர்—ஆன் விளக்க உரை எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. இத் திருப்பணியை ஏற்று நிறைவேற்றி வைக்கத் தோன்றியது ஒரு தெய்வ சங்கற்பம் என்று எனக்குப் படுகிறது.

திருமறைகளேயும் வேதங்களேயும் அவற்றின் மூல மொழியிலேயே படிப்பதுதான் சிறப்பு. அவை தோன்றிய காலம் முதல் இன்றுவரை எத்தனே கோடி மனிதர்களால் அது அம்மொழியிலேயே உச்சரிக்கப் பட்டிருக்க முடியுமோ, அந்த அளவுக்கு ஒரு மந்திரத்திற்குரிய வேகமும், வீச்சும் மூல மொழியிலே திருமறைகளே ஓதும் பொழுது ஏற்படுகிறது. இதனுலேயே திருகுர்—ஆன் அதன் மூலமான அராபி மொழியிலே உலகமெங்கும் தொழுகையின் போது பயன் படுத்தப் படுகிறது. எனவே குர்—ஆனில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கான ஒரு விளக்கத் தமிழாக்கமாக மட்டுமே இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தங்களுக்கு அளிக்கப் பட்ட 'தவ்ருத்' திருமறையை மற்றவர்களுக்கும் அளிக்காமல், தங்களளவில் வைத்துக் கொண்டதுடன், அதே உள்ளடக்கத்தை இறைவன் திரு குர்—ஆன் மூலம் முகமது நபி(ஸல்) அவர்களுக்கு அளித்து உலகம் முழுவதற்கும் அந்த நற்செய்தியைப் பரவச் செய்தது கண்டு, இஸ்ரேலியர்கள் பொருமை கொண்டார்கள் என்றும், அதனுல் இறைவனின் சாபத்துக்கும் கோபத்துக்கும் அவர்கள் ஆளாக நேரிட்டது என்றும் திருகுர்—ஆனிலேயே ஒரு செய்தி வருகிறது.

இம்முயற்சி குர்-ஆனின் நற்செய்தியை தமிழறிந்த அனேவர்க்கும் மேலும் எட்டச்செய்யும் நோக்கம் கொண்டது. இதன் மூலம் நாம் இறைவனின் மகிழ்ச்சிக்கும் கருணேக்கும் நேர் பாத்திரமாக ஆவோம் என்று, திருகுர்-ஆன் அளிக்கும் மேற்கண்ட செய்தியின் பலத்தில், நான் நம்புகிறேன்.

இந்த திருகுர்—ஆன் வரிசை நிறைவு பெற்றதும் இதர அடிப்படை சமய வேதங்களேயும் தொடர்ந்து எளிய

இனிய தமிழில் தர இருக்கிறோம். அவற்றை சிறந்த முறையில் தயாரித்து அளிக்கும் பொறுப்பை ஞானரதம் சார்பில் ஏற்றிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இத் திருகுர்—ஆன் விளக்க உரையைப் படிக்கும் நேயர்கள் எந்த இடத்திலாவது சந்தேகமோ, மேலும் விளக்கத் தேவையையோ உணர்ந்தால், அது பற்றி எழுதினால், அடுத்த மாதம் அதற்கான விளக்கம் அளிக்கப் படும்.

இத் திருப்பணியைத் துவக்கி வைத்து, அதைத் தொடர்ந்து நிறைவேற்றும் பொறுப்பை என்னிடம் அளித்த கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை—20
30. 12. 1977

அன்பு
**அப்பாஸ் இப்ராஹீம்**
**(தேவ சித்ரபாரதி)**
ஆசிரியர், ஞானரதம்.



மெக்காவில் அருளப்பட்டது

# திறப்பு

எல்லையிலா அருளாளன்
இணையில்லா அன்புடையோன்
அல்லாவை துணைகொண்டு
ஆரம்பம் செய்கின்றேன்.

★ ★ ★

உலகமெலாம் காக்கின்ற
உயர்தலைவன் அல்லாவே
தோன்றுபுகழ் அனைத்திற்கும்
சொந்தமென நிற்பவனும்.

அவன் அருளாளன்
அன்புடையோன்.

நீதித்திருநாளின்
நிலையான பெருந்தலைவன்.

உன்னையே நாங்கள்
உறுதியாய் வணங்குகிறோம்
உன்னுடைய உதவியையே
ஓயாமல் கோருகிறோம்.

நேரான பாதையிலே
நீஎம்மை நடத்திடுவாய்.

அருளைக் கொடையாக்கி
யார்மீது சொரிந்தனையோ
அவர்களது பாதையிலே
அடியவரை நடத்திவிடு.

எவர்மீது உன்கோபம்
எப்போதும் இறங்கிடுமோ
எவர்கள் வழிதவறி
இடம்மாறிப் போனாரோ
அவர்களது வழிவிட்டு
அடியவரைக் காத்துவிடு.

★ ★ ★

## அத்தியாயம் II :                    காஃ

### அல்மதீனவில் அருளப்பட்டவை

### பிரிவு—1     மூலகம்கொள்கைகள்

எல்லையிலா அருளாளன் இணையில்லா
அன்புடையோன்
அல்லாவை துணைகொண்டு ஆரம்பம் செய்கின்றேன்

★ ★ ★

* அலிப், லாஅம்; மீஇம். 1.

ஐயமே இல்லாமல் அருளுமித் திருமறை
தீமையினை விட்டுத் திரும்புவோர்க்கு வழிகாட்டி. 2.

அத்தகைய மனிதர்கள் ஐம்புலனுக்கும் எட்டாத தூயவன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். காலம் தவறாமல் தொழுகை நடத்துகிறார்கள். இறைவன் அருளிய பொருள்களை அவரவர்களுக்கேற்ற விகிதப்பட்டி தான தருமம் செய்கிறார்கள். அவர்கள் முறைப்படி செலவு செய்கிறார்கள். 3

* இந்த மூன்று அரபி எழுத்துக்கள், அகர, லகர. மகர உச்சரிப்புடையவை. இதற்கு, குர்—ஆனுக்கு விளக்கம் எழுதிய பேரறிஞர்கள் எவரும் நேர் விளக்கம் தர வில்லை. அதனால் அரபி எழுத்தாகவே அவை இங்கு தரப்பட்டுள்ளன. வேறு சில அத்தியாயங்களின் துவக்கத்திலும் இம்மூன்று அரபி எழுத்துக்கள் மட்டும் அப்படியே தரப்படும்.

மேலும் அத்தகையோர், ஏ, திருத்தூதரே! உம்பால் அருளப்பட்டுள்ள இந்தத் திருமறையின் மீது நம்பிக்கையுள்ளவர்கள். தங்களுக்கு முந்திய தூதர்களால் அருளப்பட்ட வேதங்களின் மீதும் நம்பிக்கையுள்ளவர்கள். மரணத்துக்குப் பின் மறு உலக வாழ்விலும் அவர்கள் நம்பிக்கை கொண்டு உறுதியாக நிற்கின்றனர். 4

அவர்கள்தான் உலகம் காக்கும் உத்தமனின் வழியில் நிற்கின்றார்கள். பூமியில் வெற்றிகரமாக வாழ்ந்தவர்களும் இவர்களே. 5

இறை உணர்ச்சியை, நம்பிக்கையை நிராகரித்த நாத்திகர்களை, ஏ, திருத்தூதரே! நீர் அச்சமூட்டி எச்சரிக்கின்றீர்! சமயங்களில் விட்டு விடுகின்றீர்! அவர்களைப் பொறுத்தவரை இரண்டுமே ஒன்று தான். ஏது கூறினும் அவர்களுக்கு இறை நம்பிக்கை வாராது. 6

அத்தகையோரின் இதயத்திலும், காதுகளிலும் அல்லாவின் முத்திரை விழுந்து விட்டது. அவர்களது விழிகளைத் திரைகள் மூடி இருக்கின்றன. தாங்கவொண்ணத வேதனையை அவர்கள் அனுபவிப்பது உறுதி. 7



## பிரிவு—2 உதட்டளவில் உறுதி

"அல்லாவின் மீது நம்பிக்கை கொள்கிறோம். இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை வைக்கிறோம்," என்று வாயளவில் கூறும் மனிதர்கள் உண்டு. ஆனல் அவர்கள் உள்ளத்தில் இறை நம்பிக்கை இல்லை. 8

அவர்கள் அல்லாவையும் ஏய்க்கிறார்கள், அவர்களை நம்புகிறவர்களையும் ஏய்க்கிறார்கள். அதன் மூலம் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். ஆனல் அவர்கள் இதை உணரவும் மாட்டார்கள். 9

அவர்களுடைய இதயம் நோய் வாய்ப்பட்டிருக்கிறது. அந்த நோயை அல்லாவே அதிகப்படுத்தி விட்டான். அவர்கள் பொய்யர்கள். அதனுல் அவர்களுக்கு வலியும் அதிகம்; வேதனையும் அதிகம். 10

மேலும் அவர்களிடம் சென்று, ''தவறு செய்யாதீர்கள், விஷமம் செய்யாதீர்கள்'' என்ருல், ''நாங்கள் அமைதி காப்பவர்கள்.'' என்றுதான் அவர்களும் கூறுகிருர்கள். 11

அறிவீர்களாக! அவர்கள் தவருனவர்கள். நிச்சயமாகத் தவருனவர்களே! ஆனுல் அவர்கள் இதை உணர மாட்டார்கள். 12

மேலும் அவர்களிடம் சென்று, ''மற்ற மனிதருக்குள்ள இறை நம்பிக்கையைப் பாரீர்! அந்த நம்பிக்கையை நீங்களும் ஏன் கொள்ளக் கூடாது'' என்று கேட்கும் போது, ''அவர்கள் மூடர்கள், அவர்களைப் போல நாங்களுமா நம்பிக்கை கொள்வோம்?'' என்று பதிலளிக்கிருர்கள். அறிவீர்களாக! நிச்சயமாக அவர்கள் மூடர்கள். ஆனுல் அவர்கள் அதை உணர மாட்டார்கள். 13

அத்தகையோர் நம்பிக்கையுள்ள மானிடர்களைக் காணும் போது, ''எங்களுக்கும் இறைவன் மீது நம்பிக்கையுண்டு'' என்று நடிக்கிருர்கள். மானிடப் பண்பை விட்டு விலகிய கலகக்காரரிடம் சேர்ந்திருக்கும்போது, ''நாங்கள் உங்களோடுதான் இருக்கிறோம். இறை நம்பிக்கையாளரைக் கேலிதான் செய்கிறோம்'' என்கிருர்கள். 14

அல்லா அவர்களது கேலியையே அவர்களுக்கு பதிலாக்கி இருக்கிருன். அப்படிப்பட்டவர்கள் தங்கள் நடத்தையாலேயே விழிகண் — குருடர்களாகத் தட்டழிந்து கெட்டுப் போகும்படி விட்டு விடுகிருன். 15

நேர்வழி ஒன்றிருக்க, குறுக்கு வழியை விலைக்கு வாங்குகிறவர்கள் அவர்கள்; ஆனுல் அவர்களது வாணிபத்தில் பயனுமில்லை; அதைப் பார்த்த பின்னும் அவர்கள் நேர்வழியில் திரும்பவுமில்லை. 16

ஞான விளக்கேற்றும் ஞானிகள் காட்டும் உதார ணங்கள் போலவே, அவர்களும் உதாரணம் காட்டுகிறார்கள். உவமை சொல்கிறார்கள். அவர் கள் பேசும் ஞானப் பேச்சு அவர்களைச் சுற்றிலும் ஒளிவிடத் தொடங்கும் போது அல்லா அவர்களது கண்ணொளியைப் போக்கி விடுகிறான்; காரிருளில் அவர்களைக் கண் கெட்டு அலைய விடுகிறான். 17

அவர்கள் ஊமைகள், செவிடர்கள், குருடர்கள். அவர்கள் தங்கள் பாதையில் இருந்து மீள மாட் டார்கள். 18

அவர்களது உவமை காரிருளும், பேரிடியும், கண் பறிக்கும் மின்னலுமாய் மேகம் பொழியும் பெரு மழைபோல் விழுகிறது. அதில் சிக்கிக் கொண்ட வர்கள் மரணத்துக்கு அஞ்சுகிறார்கள். கை விரல் களால் தங்கள் செவிகளைப் பொத்திக் கொள் கிறார்கள். ஆனால் ஒன்று, சத்தியத்தை யார் நிரா கரிக்கிறார்களோ அவர்களை அல்லா சுற்றி வளைத்துக் கொள்கிறான். 19

அம் மின்னல் ஏன் வீசுகிறது? அது அவர்களுடைய கண்களைப் பறிக்க விரும்புகிறது. அந்த மின்னலின் ஒளியில் அவர்கள் சிறிது தூரம் நடக்கிறார்கள். இருள் சூழும் பொழுது செயலற்று நிற்கிறார்கள். அல்லா விரும்பி இருந்தால் அவர்களது கண் ணையும் செவியையும் திருகி எடுத்திருப்பான். நிச்சயமாக எதன் மீதும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய பேராண்மை பெற்றவனாக அல்லா விளங்குகிறான். 20

## பிரிவு—3 ஒருவனே இறைவன்

ஏ, மானிடர்களே! தீமையில் இருந்து விடுபட விரும்புகிறீர்களா? உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்ள விரும்புகிறீர்களா? அப்படி யென்றால்

உங்களைப் படைத்தவன், உங்களுக்கு முன்னுலேயே மனித வர்க்கத்தைப் படைத்தவன்—அந்த ரட்சகன்—அவனை வணங்குங்கள்! 21

அவன்தான் உங்களுக்கு இந்த அழகான பூமியை விரித்துக் கொடுத்தான். வானமெனும் கூரையை கட்டுக் கோப்பாக அமைத்துக் கொடுத் தான். அவன் மேகத்தை உண்டாக்கினுன். அதி லிருந்து மழையை இறக்கினுன். செடி கொடிகளை வளர்த்தான். கனி வர்க்கங்களை உற்பத்தி செய் தான். உங்களுக்கு உணவு நல்கினுன். ஆகையால் அல்லாவுக்கு ஈடாக ஒன்றை நீங்கள் மனமறிய ஏற்படுத்தாதீர்கள். 22

இதோ எமது திருத்தூதருக்கு நாம் அருளியுள்ள இத் திருமறை குறித்து நீங்கள் சந்தேகப்படு வீர்களா? அப்படியென்ருல் இதில் இருப்பதைப் போன்ற ஒரு அத்தியாயத்தை எழுதுங்கள் பார்ப் போம். நீங்கள் உண்மையானவர்களாக இருந் தால், அல்லாவைத் தவிர மற்ற எல்லோரையும் உங்கள் துணைக்கு அழைத்துக் கொள்ளுங்கள். 23

உங்களால் அது இயலாதென்ருல்—எனக்குத் தெரியும், உங்களால் அது இயலாது—அதன் பின்னராவது மனிதர்களாயினும், மலைக் கற்களாயி னும், அவை கொழுந்து விட்டெரியும் நரகத்தின் ஜ்வாலையில் இருந்து உங்களைக் காத்துக்கொள்ள முற் படுங்கள். அந்த நரகம் சத்தியத்தை நிராகரிக்கும் நாத்திகர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 24

மேலும் நாயகன் மீது நன்னம்பிக்கை கொண் டோருக்கும், நற்செயல் புரிவோருக்கும் என்ன இடம் கிடைக்கும் தெரியுமா? சலசலவென அருவிகள் ஒலிக்கின்ற ஆனந்தப் பூங்காவனங்கள் அவர்களுக்கு உண்டென்று ஏ, திருத்தூதரே! நீர் நற்செய்தி கூறுவீராக! அந்தப் பூங்காவனத்தில் ஏதேனும் ஒரு கனி அவர்களுக்குத் தரப்படும். ''நாங்கள் இதை பூமியிலேயே அருந்தி இருக் கிருேம்'' என்று அவர்கள் சொல்வார்கள். காரணம், அவர்கள் விரும்பும் கனிகளையே பெறு கிருர்கள். மேலும் அத்தகைய உத்தமர்களுக்கு

அந்தப் பூங்காவனங்களில் புனிதமான துணைவியரும் கிடைப்பார்கள். அவர்கள் அந்தப் பூங்காவனங்களிலே நிரந்தரமாய் நிலைத்து வாழ்பவர்கள். 25

நிச்சயமாக உவமைகளை அள்ளி வீச அல்லா தயங்க மாட்டான். அது ஒரு கொசுவாக இருக்கட்டும். அல்லது அதைவிட ஒரு சிறிய ஜந்துவாக இருக்கட்டும். நம்பிக்கையுடையவர்கள் அதைக் கண்டால், அது ரட்சகனிடம் இருந்து வந்துள்ள உவமைக்கான உண்மையென்று அறிந்து கொள்கிறார்கள். ஆனால் சத்தியத்தைப் புறக்கணித்த நாத்திகர்கள், ''இந்த உவமையின் மூலம் அல்லா விரும்புவதென்ன?'' என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்பவர்கள் வழி தவறிச் செல்கிறார்கள். அவர்களில் பலரை அல்லா நேர்வழி பெறச் செய்கிறான். எல்லை கடந்த குணக்கேடர்களைத் தவிர, வேறு எவரையும் பாதை தவறிச் செல்ல அல்லா அனுமதிப்பதில்லை. 26

அல்லா ஒரு ஒப்பந்தம் செய்கிறான். சத்திய விரோதிகள் அதன் மீது உறுதி எடுத்துக்கொண்ட பிறகு, அதை முறித்து விடுகிறார்கள். அவன் எதையெதை இணைத்து வைக்கச் சொல்கிறானோ, அதை எல்லாம் கத்தரித்து விடுகிறார்கள். இடைவிடாமல் அவர்கள் பூமியில் தவறு செய்கிறார்கள். குறும்பு செய்கிறார்கள். ஆனால் இறுதியில் கஷ்டமும் நஷ்டமும் அவர்களுக்கே. 27

எப்படி நீங்கள் அல்லாவை எதிர்க்க முடியும், வெறுக்க முடியும், நிராகரிக்க முடியும்? மூலத்தில் உயிரில்லாமல் இருந்த ஏ, ஜடங்களே! உங்களுக்கு உயிர் கொடுத்தவன் அல்லா. இந்த உயிரைப் பறிக்கப் போகிறவனும் அல்லா. நீங்கள் இறந்த பின்னாலே உங்களை உயிர்ப்பித்து தன் முன்னாலே நிறுத்தப் போகிறவனும் அல்லா. 28

உலகத்துப் பொருட்களையெல்லாம் உங்களுக்காக உண்டாக்கியவன் அவனே! வான மண்டலத்திலும் உங்களுக்காக சிலவற்றை அவன் சிருஷ்டித்தான். ஒரு மண்டலமல்ல. ஏழு வான மண்டலங்களாக

அதைப் பூர்த்தி செய்து முடித்தான். உண்மை, இன்மை, நன்மை, தீமை அனைத்தையும் அறிந்தவன் அவனே. 29

## பிரிவு—4 மானிடரும் தூதுச் செய்தியும்

மேலும் ஏ, திருத்தூதரே! கேட்பீராக! ''எனது பிரதிநிதியாக ஒருவரை பூமியை ஆளும்படி நான் நிச்சயமாக அனுப்பப் போகிறேன்'' என்று உமது ரட்சகன் தேவர்களுக்குக் கூறினான். தேவர்கள் சொன்னார்கள்: ''அப்படியா! மண்ணுலகில் தவறு செய்து ரத்தம் சிந்தப் போகும் ஒரு மனிதனையா நீ அங்கே உண்டாக்கப் போகிறாய்? நாங்கள் தான் அல்லும் பகலும் உன்னைத் துதி பாடுகிறோம். உனது புனிதத் தன்மையின் புகழ் பாடுகிறோம். எங்கள் நிலை என்ன?'' என்று. அதற்கு இறைவன் சொன்னான்: ''உங்களுக்குத் தெரியாதது எமக்கு நிச்சயம் தெரியும்'' என்று. 30

பிறகு ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டார். உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளின் பெயரையும் ஆதாமுக்கு இறைவன் சொல்லிக் கொடுத்தான். பிறகு அந்தப் பொருள்களை யெல்லாம் கொண்டு வந்து தேவர்கள் முன்னிலையில் வைத்தான். ''உண்மை யுணர்ந்தவர் நீங்களென்றால் இந்தப் பொருள்களுக்கு என்னென்ன பெயர்கள் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றான். 31

அவர்கள் கலங்கினார்கள். நடுங்கினார்கள். ''இறைவா, தூயவன் நீயே! அறிந்தவன் நீயே! ஆசான் நீயே! நீ சொல்லிக் கொடுத்ததைத் தவிர வேறொன்றும் எங்களுக்குத் தெரியாது. எல்லாம் அறிந்த விவேகம் நிறைந்தவன் நீயே'' என்றார்கள். 32

உடனே இறைவன் ஆதாமின் பக்கம் திரும்பி, ''ஏ, ஆதாம்! நீர் அந்தப் பொருள்களின் பெயர்களைத்

தேவர்களுக்கு அறிவியும்'' என்றான். ஆதாம் உடனே அந்தப் பொருள்களின் பெயர்களை அவர்களுக்கு அறிவித்தார். அப்போது, இறைவன் கூறினான்: ''வானிலும் மண்ணிலும், மறைந்து கிடக்கும் பொருள்களையும் நான் அறிவேன். வானவர்களாகிய நீங்கள் காணச் செய்வதையும், மறைத்து வைப்பதையும் கூட நான் அறிவேன். இவற்றை முன்பே நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?'' என்றான். 33

மேலும் இறைவன் சொன்னான்: ''நீங்கள் ஆதாமுக்கு அடி பணியுங்கள்'' என்று. தேவர்களுக்கு நாம் சொன்ன போது, அவர்கள் நம் கட்டளைக்குப் பணிந்தார்கள். ஆனால் 'இப்லீஸ்' என்ற சைத்தான் மட்டும் ஆணவத்தோடு மறுத்து விட்டான். அவன் சத்தியத்தையே மறுக்கும் நாத்திகர் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். 34

மேலும் நாம் கூறினோம்: ''ஏ, ஆதாம்! நீரும் உமது துணைவியும் இப் பூங்காவனத்தில் வாழ்ந்திருங்கள். இங்கே நீங்கள் எங்கே சென்றாலும் சரி, அங்கே சுவையானதாக என்ன கிடைத்தாலும் சரி, அவற்றையெல்லாம் நீங்கள் உண்ணலாம். ஆனால், இதோ இந்த மரத்தை மட்டும் இருவரும் நெருங்காதீர்கள். நெருங்கினால் இருவரும் நியாயம் தவறிப் போய்விடுவீர்கள்.'' 35

ஆனால், சைத்தானே, அவர்கள் இருவரையும் அந்தச் சத்திய நிலையில் இருந்து வழுக்கி விழுமாறு செய்து விட்டான். உடனே நாம் ஆதாமைப் பார்த்துச் சொன்னோம்: ''நீங்கள் இருவரும் இங்கிருந்து வெளியேறி விடுங்கள். இனி நீரும், உமது மனைவியும் ஒருவருக்கொருவர் பகைவராவீர்கள். அத்தோடு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தான், பூமியில் நீங்கள் இருக்க இடமும், உண்ண உணவும் உண்டு.'' 36

இறைவன் சொல்லி முடிந்ததும் ஆதாம் தன் ரட்சகனிடமிருந்து தேவ கட்டளைகளைப் பெற்றுக் கொண்டார். பின்னர் இறைவன் அந்த இருவரையும் பார்த்துக் கருணையோடு திரும்பினான். நிச்சயமாக

அவனது கருணை மீண்டும் மீண்டும் திரும்புகிறது. அவன் எப்போதுமே அவ்வளவு கருணை நிறைந்தவனாக இருக்கிறான். 37

நாம் சொன்னோம்: ''இங்கிருந்து புறப்பட்டு விடுங்கள். சிறிது காலத்தில் என்னிடமிருந்து வழிகாட்டும் ஒளிவிளக்கு உங்களிடம் வந்து சேரும். அந்த விளக்கின் வெளிச்சத்தில் பயணம் செய்கிறவர்கள் யாரோ அவர்களை அச்சம் நெருங்காது, துன்பம் தொடராது.'' 38

''ஆனால் ஒன்று, திருத்தூதரே! நாம் அனுப்பும் செய்திகளை யார் நிராகரிக்கிறார்களோ, பொய்யாக்குகிறார்களோ அவர்கள் நரகத் தீயின் தோழர்கள். நீண்ட நெடுங்காலம் அதிலேயே நிலைத்து நிற்பார்கள். 39

## பிரிவு—5 தீர்க்க தரிசனங்கள்

''ஏ, இஸ்ரேலின் மக்களே! நான் உங்கள் மீது சொரிந்த அருட்கொடைக்கு நன்றி சொல்லுங்கள். நீங்கள் எனக்களித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். நான் கொடுத்த வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன். ஒன்று கூறுவேன்: என்னைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாதீர்கள். 40

நான் இந்தத் திருமறையில் சொல்வது என்ன? உங்கள் வேதமான 'தவ்ராத்'தை நியாயப்படுவதுதான் இது. ஆகவே இதில் நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். இதை மறுப்பவர்களுள் முதன்மையானவர்களாக நீங்கள் ஆகிவிடாதீர்கள். அற்ப வருவாயைக் கருதி இத் தூதுச் செய்திகளை விலையாக்கி விடாதீர்கள். நாம் சொல்வதையே கேளுங்கள், எமக்கு மட்டுமே அஞ்சுங்கள், உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். 41

மேலும் பொய்யைப் போட்டு உண்மையைக் குழப்
பாதீர்கள். மனமறிந்த உண்மையை மறைக்கத்
தலைப்படாதீர்கள். 42

நீங்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடிக்க
வேண்டும். உங்களுடைய செல்வத்தில் இரண்
டரை சதவிகிதம் ஏழைகளுக்கான தர்ம
விகிதம் என்பதை மறவாதீர்கள். அதை முறை
யாகக் கொடுத்து வாருங்கள். தொழுகைக்காகத்
தலை குனியுங்கள். யார் யார் தலை குனிந்து தொழு
கிறார்களோ அவர்களோடு சேர்ந்து கொள்
ளுங்கள். 43

நீங்கள் 'தவ்ருத்' வேதத்தை ஓதுகிறீர்கள். நல்ல
வர்களாக இருக்குமாறு மானிடர்களுக்கு ஆணை
யிடுகிறீர்கள். ஆனால் அப்படி நடந்து கொள்ள
நீங்கள் மறந்து விட்டீர்கள். உங்களுக்கே இது
புரியவில்லையா? 44

பொறுமையின் மூலமும், தொழுகையின் மூலமும்
இறைவனின் உதவியை நாடுங்கள். பணிவுள்ள
வர்களுக்கே இறைவனின் உதவி வந்து சேரும்.
மற்றவர்களுக்கு அது வெறும் சுமையே. 45

பணிவுள்ளவர்கள் யார்? ''இறைவனைச் சந்திக்கப்
போகிறோம், அவனிடமே போய்ச் சேரப் போகி
றோம்'' என்று உறுதியாக நம்புகிறவர்களே, பணி
வுள்ளவர்கள். 46

பிரிவு—6

## இஸ்ரேலியர்களுக்கு இறைவன் திருச்சொல்

ஏ, இஸ்ரேலின் மைந்தர்களே! நான் உங்கள் மீது
எவ்வளவு அருள்மழை சொரிந்தேன். எனது
செய்திகளை உலகுக்குச் சொல்லும் முதல் அதி
காரத்தை உங்களுக்குத் தந்தேன். அவற்றை
நினைவுபடுத்திப் பாருங்கள். 47

இதோ ஒரு நாள் வரப் போகிறது. அந்த நாளில் ஒரு ஆத்மாவுக்கு மற்றொரு ஆத்மா எந்த விதத் திலும் பயன்படாது. ஒன்றுக்காக ஒன்று பரிந்து பேசுவது எடுபடாது. ஒன்றுக்காக மற்றொன்று பரிகாரம் தேட முடியாது. ஒன்று மற்றொன்றுக்கு உதவ முடியாது. அந்த நாளை எதிர்பார்த்துத் தற் காத்துக் கொள்ளுங்கள். 48

நாம் உங்களை 'பிர்அ' வினுடைய பிடியில் இருந்து விடுதலை செய்தோம். அவன் உங்களுக்களித்த வேதனை எவ்வளவு? அவன் உங்கள் குமாரர்களைக் கொன்றான். மாதர்களை மட்டும் உயிரோடு வைத்துக் கொண்டான். அப்போது உங்கள் ரட்சகனிடமிருந்து பெரும் சோதனையும் உங் களுக்கு ஏற்பட்டிருந்தது. 49

நாம் உங்களுக்காக கடல் இரண்டாகப் பிளந்து வழி விடச் செய்தோம். அந்த வழியில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். உங்களைத் தொடர்ந்து 'பிர்அ' வினுடைய கூட்டம் வந்து கொண் டிருந்தபோது, நாம் கடலை ஒன்று சேர்த்து அந்தக் கூட்டத்தை மூழ்கடித்தோம். உங்கள் கண் முன்னாலேயே அது நடந்தது. 50

மேலும் நாம் 'தவ்ருத்' வேதத்தை மூஸாவுக்கு அளிக்க நாற்பது இரவுகளை உண்டாக்கினோம். அதற் காக அவர் சென்றிருந்தபோது, நீங்கள் கன்றுக் குட்டியைக் கடவுளாக்கிக் கொண்டீர்கள். கவலைக் குரிய தவறுகளையெல்லாம் நீங்கள் செய்தீர்கள். 51

உங்களுக்கு நன்றி வரும் என்று அதன் பிறகும் நாம் மன்னித்தோம். 52

நீங்கள் நேர்வழியடைய நாம் மூஸாவுக்கு 'தவ்ருத்' வேதத்தை அளித்தோம். உண்மைக்கும், பொய்க்கும் இடையேயுள்ள பாகுபாட்டையும் உணர்த்தினோம். 53

மூஸா தமது குடிமக்களைப் பார்த்து, "எனது இனத் தோன்றல்களே! நீங்கள் கன்றுக் குட்டியைக் கடவுளாகப் பாவித்ததன் மூலம், உங்களுக்கே தீங்கிழைத்துக் கொண்டு விட்டீர்கள். ஆகையால் உங்களைப் படைத்தவன் பக்கம் பயபக்தியோடு

முகம் திருப்புங்கள். உங்கள் ஆசைகளை அழித்து விடுங்கள். அதுதான் உங்களைப் படைத்தவனுக்கு உகந்ததாக இருக்கும்'' என்றார். ஆகவே இறைவன் உங்களைக் கருணையோடு நோக்கித் திரும்பினான்: எப்பொழுதும் அவன் திரும்பிப் பார்ப்பவன், கருணை மிக்கவன். 54

நீங்கள் மூஸாவிடம், ''ஏ, மூஸா! அல்லாவை நாங்கள் கண்ணெதிரே காணும் வரை உம்மீது எங்களுக்கு நம்பிக்கை ஏற்படாது'' என்று கூறினீர்கள். அப்போது உங்கள் கண் முன்னே பூகம்பம் எழுந்தது. அது உங்களைப் பற்றிக் கொண்டது. 55

பின்பு, உங்கள் நன்றி உணர்வை நம்பி இறந்து போன உங்களை நாம் எழுப்பி விட்டோம். 56

கடும் வெயிலில் நீங்கள் அவதிப்பட்டீர்கள். நாம் மேகங்களை அனுப்பி உங்களுக்கு நிழல் தரச் சொன்னோம். உங்களுக்கு 'மண்', 'சல்வா' போன்ற உணவுப் பொருள்களை இறக்கி வைத்தோம். நாம் அளித்துள்ள இந்தப் புனிதமான உணவுகளை உண்டு பசி தீருங்கள் என்றோம். கட்டளை மீறப் பட்டது. அதில் எமக்கொன்றும் தீங்கில்லை. யார் மீறினார்களோ அவர்கள் சொந்த ஆத்மாக் களுக்கே தீங்கிழைத்துக் கொண்டார்கள். 57

ஜெருசலம் நகருக்குள் நுழையுமுன் இறைவன் மூஸாவுக்கு விடுத்த தூதுச் செய்தியை நினைவு கூறுங்கள்: ''இந் நகருக்குள் நுழையுங்கள். எங்கே சென்றாலும் அங்கே சுவையாக எது கிடைத் தாலும் உண்ணுங்கள். நகர் வாசலில் நுழையும் போது தலை தாழ்ந்து நுழையுங்கள். மன்னிப்புக் கோரி விண்ணப்பித்துக் கொள்ளுங்கள். நாம் உங்கள் குற்றங்களை மன்னித்து விடுவோம். பிறருக்கு நன்மை செய்யும் பெரிய உள்ளங்களுக்கு நாம் தரும் பரிசை அதிகமாகவும் ஆக்குவோம்.'' 58

ஆனால் நியாயம் கெட்ட அவர்கள் அல்லாவின் வார்த்தையை மாற்றிக் கொண்டார்கள். கேட்டது ஒன்று, நடப்பது ஒன்று என நடந்து கொண் டார்கள். ஆகையால் வரம்பு மீறிய அந்த

நியாயம் கெட்டவர்கள் மீது வானத்தில் இருந்து ஒரு துன்பத்தை 'பிளேக்' நோய் போல இறக்கி வைத்தோம். 59

## பிரிவு—7 இறைவன் திருச்சொல்—2

மேலும் மூஸா, "தம் இனத்து மக்களுக்குத் தண்ணீர் வேண்டும்" என்றார். "கையிலுள்ள தண்டத்தைக் கொண்டு பாறையை வெட்டுங்கள்" என்றோம். அந்தப் பாறையில் பன்னிரண்டு கண்கள் விட்டன. பன்னிரண்டு நீரூற்றுக்கள் துள்ளி எழுந்து ஓடி வந்தன. ஒவ்வொரு கூட்டமும் தனது நீரூற்றைத் தெளிவாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. அப்போது இறைவன் சொன்னான்: "அல்லா தருவதை ஆனந்தமாக உண்ணுங்கள், பருகுங்கள், பசி தீருங்கள். ஆனால் கேடு செய்யும் மானிடராய்க் கெட்டழியாதீர்கள்."
60

மேலும் நீங்கள் மூஸாவைப் பார்த்து, "ஏ, மூஸா! இந்த ஓரே உணவோடு நாங்கள் திருப்தியடைய மாட்டோம். நீர் உமது ரட்சகனிடம் சொல்லி பூமியில் கீரைகளையும், காய்களையும், தானியங்களையும், பருப்புகளையும், வெங்காயங்களையும் எங்களுக்கு உண்டாக்கித் தாருங்கள்" என்றீர்கள். அதற்கு அவர் சொன்னார்: "நான் உயர்ந்ததைக் கொடுத்தேன். நீங்கள் தாழ்ந்ததைக் கேட்கிறீர்கள். தேவையென்றால் நகரத்துக்குச் செல்லுங்கள். அங்கே நீங்கள் கேட்கும் காய்கறி கிழங்கு முதலியவை நிச்சயமாகக் கிடைக்கும். நீங்கள் அப்படிக் கேட்டதனால் உங்களுக்குச் சோதனைகளும், கஞ்சத்தனமும் ஏற்பட்டன. அல்லாவின் ஆத்திரத்துக்குப் பாத்திரமாகி விட்டீர்கள். காரணம், நீங்கள் அல்லாவின்

தூதுச் செய்திகளை மறுத்தீர்கள், திருத்தூதர்களை வதைத்தீர்கள். ஏறுக்கு மாறாகச் சென்றீர்கள், எல்லைமீறி நடந்தீர்கள். 61

## பிரிவு—8 இஸ்ரேலியரின் அழிவுப் பாதை

நிச்சயமாக இறை நம்பிக்கை கொண்டவர்களிலும், 'எஹூதி'களாக இருக்கும் இஸ்ரேலியர்களிலும், 'நசாராக்' என்னும் கிறிஸ்தவர்களிலும், 'சேபியர்' என்னும் அரைக் கிறிஸ்தவர்களிலும் எவர் அல்லாவின் மீதும், இறுதியான நீதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்து வருகிறார்களோ, அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல பரிசு அவர்களுடைய ரட்சகனிடம் இருக்கிறது. மேலும் அவர்களுக்கு அச்சமுமில்லை, துன்பமும் இல்லை. 62

மேலும் நாம் உங்களிடமிருந்து உறுதிமொழி ஒன்று வாங்கி, உங்களைவிட உயரமாக 'சினாய்' எனும் குன்றை ஏற்படுத்தினோம். அப்போது நடந்ததை நினைவு படுத்திப் பாருங்கள். தீமைகளில் இருந்து உங்களைத் தற்காத்துக் கொள்ள நாம் உங்களுக்கு அளித்துள்ளதை பலங்கொண்டு பற்றிக் கொள்ளுங்கள். அதை மறவாமல் உள்ளத்தில் வையுங்கள் என்று உங்களுக்குக் கூறினோம். 63

அதையும் நீங்கள் புறக்கணித்தீர்கள். உங்கள் மீது அல்லாவின் அன்பும் கருணையும் இல்லாது போயிருந்தால், நீங்கள் எல்லாவற்றையும் இழந்தவர்களாக ஆகியிருப்பீர்கள். 64

வாரக் கடைசியில் வரும் சனிக்கிழமை ஓய்வு நாள் என்பது உங்களுக்குத் தெரியும். அன்று உங்களில் சிலர் முறை தவறி நடந்தார்கள். அவர்கள் யார் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் சிறுமையுற்றவர்களாக, வெறுக்கப் பெற்றவர்

களாக, மந்திகளாக ஆகி விடுவீர்கள் என்று நாம் அவர்களைச் சபித்தோம். 65

தங்கள் காலத்தில் வாழ்வோர்க்கும், எதிர்கால சந்ததிகளுக்கும் ஒரு உதாரணமாகவும், தீமையில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள விரும்பு கிறவர்களுக்கு ஒரு அறிவுறுத்தலாகவும் இதைச் செய்து முடித்து விட்டோம். 66

மேலும் ஒன்று நிகழ்ந்தது. ''நீங்கள் ஒரு காளையை பலியிட வேண்டுமென்று அல்லா உங்களுக்குக் கட்டளை இடுகிறான்'' என்று மூஸா தன் குலத் தோன்றல்களுக்குச் சொன்னபோது, அவர்கள், ''ஏன் எங்களைக் கேலி செய்கிறீர்கள்?'' என்றார்கள். அதற்கு அவர், ''நான் அறிவற்ற கூட்டத்தை விட்டு அல்லாவைச் சரணடை கிறேன்'' என்றார். 67

அதற்கு அவர்கள், ''அந்தக் காளைக்கு என்ன வயது இருக்க வேண்டும் என்று உங்கள் ரட்ச கனைக் கேட்டுத் தெரிவியுங்கள்'' என்று சொன் னார்கள். அதற்கு மூஸா, ''நிச்சயமாக அது கிழட்டுக் காளையாகவும் இருக்கக் கூடாது, பால் குடிக்கும் கன்றுக் குட்டியாகவும் இருக்கக் கூடாது. இரண்டுக்குமிடையே நடுத்தர வயதுக் காளையாக இருக்க வேண்டும், என்று அல்லா சொன்னான். அந்த ஆண்டவன் கட்டளையை நிறைவேற் றுங்கள்!'' என்றார். 68

மேலும் அவர்கள், ''அது என்ன நிறம் இருக்க வேண்டும் என்று உங்கள் அல்லாவிடம் கேட்டுச் சொல்லுங்கள்'' என்றார்கள். அதற்கு மூஸா, ''அது ஒரு மஞ்சள்நிறக் காளை. காண்போரைக் கனிவுறச் செய்யக் கூடிய மஞ்சள் நிறம் என்று இறைவன் கூறுகிறான்'' என்றார். 69

மேலும் அவர்கள், ''வெறும் நிறத்தைச் சொன்னால் போதாது. எங்கள் கண்களுக்கு எல்லாக் காளை களும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. அதன் அங்க அடையாளங்களை விரிவாக விளக்கும்படி, உங்கள் இறைவனை எங்களுக்காகக் கேளுங்கள்.

அல்லாவின் பார்வை எங்கள் பக்கம் திரும்பினால்
நாங்கள் நல்வழி பெற்றவர்களாக இருப்போம்''
என்றார்கள். 70

அதற்கு மூஸா, ''அது நிலத்தை உழாதது. ஏற்றம்
இறைக்காதது. நோயற்ற உடல் படைத்தது. மாசு
மருவற்றது என்று இறைவன் கூறுகிறான்'' என்றார்.
''அப்பாடா! உண்மை வெளிப்பட்டு விட்டது''
என்றார்கள் அவர்கள். அதன் பிறகு தாங்கள்
கடவுளாகப் பூஜித்து வந்த காளையையே மன
மின்றி அறுத்துத் தீர்த்தார்கள். 71

## பிரிவு—9 அவர்களின் வன்நெஞ்சம்

நீங்கள் ஒரு உயிரைக் கொன்றீர்கள். அதிலும்
ஒருவருக்கொருவர் அபிப்பிராயபேதம் கொண்
டீர்கள். நீங்கள் மறைத்ததை அல்லா வெளியில்
கொண்டுவந்து விட்டான். 72

ஆகவே அவனை அதைக்கொண்டே அடியுங்கள்
என்று நாம் சொன்னோம். அப்படியே இறந்து
போன எல்லோரையும் அல்லா உயிர்ப்பிக்கிறான்.
மேலும் நீங்கள் அறியும் பொருட்டு, அல்லா
தன் சக்தியையும், சாதனைகளையும் உங்களுக்குக்
காட்டுகிறான். 73

பிறகு உங்கள் இதயங்கள் கல்லாகிவிட்டன.
ஆனால், அந்தக் கற்பாறைகளிலும் நீரூற்றுகள்
பொங்கி வருகிற பாறைகளும் உண்டு. அதே
நேரத்தில் பிளந்து போகக்கூடிய பாறைகளும்
உண்டு. அதனால்தான் அவற்றிலிருந்து தண்ணீர்
வழிந்தோடுகிறது. இன்னொன்று, அல்லாவின்
மேலுள்ள பயத்தினால் கீழே உருண்டு விழக்கூடிய
பாறைகளும் உண்டு. அல்லா நீங்கள் செல்லும்
பாதையைக் கவனிக்கிறான். அவனொன்றும் பாரா
முகமாக இல்லை. 74

ஆகவே அவர்கள் உங்கள் மீது இறை நம்பிக்கை கொள்வார்களென்று நீங்கள் நம்பிக்கை வைக்கின் றீர்கள்? அவர்களில் ஒரு பகுதியினர் அல்லாவின் மொழிகளைக் கூர்ந்து கேட்பவர்களாக இருந்தார்கள். கேட்டுத் தாங்கள் அறிந்து கொண்ட பின்னர் மாற்றி விட்டார்கள். தாங்கள் மாறி விட்டோம் என்பதையும் அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள். 75

அவர்கள் இறை நம்பிக்கையுடையவர்களைச் சந் திக்கும்போது, 'தங்களுக்கும் இறை நம்பிக்கை உண்டு' என்று கூறுகிறார்கள். ஆனால் தங்களுக்குள் தனித்திருக்கையில், ''அல்லா உங்களுக்கு என்ன சொன்னார் என்பதைச் சொல்லுங்கள்,'' என கேலியாகப் பேசுவார்கள். அவர்கள் உங்களோடு வாக்குவாதத்தில் இறங்குவார்கள். அவர்களுடைய நோக்கம் உங்களுக்குப் புரிய வில்லையா? 76

அவர்களது அகத்தையும், புறத்தையும் அல்லா அறிவான் என்பதை அவர்கள் அறியவில்லையா? 77

அவர்களில் ஒரு சிலர் எழுதப் படிக்கத் தெரியா தவர்கள். அவர்கள் வேதத்தை அறிய மாட் டார்கள். ஆனால் காதில் விழுந்த விஷயங்களைக் கொண்டு 'ஆமாம்' போடுகிறார்கள். 78

சிலர் தாங்களே வேதாகமத்தை எழுதிக் கொண்டு, இது அல்லாவிடமிருந்து வந்ததென்று பொய் கூறி, அதில் சிறு வாணிபம் நடத்தவும் முயற்சிக்கி றார்கள். என்றும் அவர்களுக்குக் கேடுகாலமே. தாங்களே வேதாகமத்தை எழுதியதனாலும் அவர் களுக்குக் கேடு வரும். அதில் சம்பாதிப்பதற்காக வும் அவர்களுக்குக் கேடு வரும். 79

மேலும் அவர்கள் எண்ணிச் சில நாட்கள் மட்டுமே நரகத் தீ, தங்களைத் தீண்டும் என்றும், அதிகம் தீண்டாதென்றும் கூறுகிறார்கள். அப்படி யாயின் ஏ, திருத்தூதரே! நீங்கள் அவர்களைக் கேளுங்கள். நீங்கள் அல்லாவிடமிருந்து வாக்குறுதி வாங்கி வந்திருக்கிறீர்களா? அப்படி அவன் கொடுத்திருந்தால் வாக்குறுதியை அவன் மாற்றிக்

கொள்ள மாட்டான். இல்லை, நீங்கள் பொய் சொல்லி உங்கள் அறியாமையை அல்லாவின் மீது ஏற்றுகிறீர்களா? 80

கேளுங்கள். எவரொருவர் தீமையையே செய்து, தீமையிலேயே வாழ்ந்து தீமையினாலேயே சூழப் பட்டிருக்கிறார்களோ, அவர்களே நரகத் தீயின் தோழர்கள். அவர்கள் நிரந்தரமாக அதிலேதான் இருப்பார்கள். 81

இன்னும் இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றவர்கள் மட்டுமே, பூங்காவனத்துக்குரியவர் கள். இவர்கள் இதிலே நிரந்தரமாக இருப்பார்கள்.
82

## பிரிவு—10 வாக்கு மீறல்

மேலும் அல்லாவைத் தவிர வேறு எதையும் நீங்கள் வணங்க வேண்டாம். உங்களுடைய பெற்றோர்களுக்கும், உறவினருக்கும், அனாதை களுக்கும், ஏழைகளுக்கும் நன்மை புரிய வேண்டும். எங்கும் எப்போதும் நல்ல வார்த்தைகளையே சொல்ல வேண்டும். தொழுகையை முறையாகக் கடைப்பிடித்தும், ஏழைகளுக்கான ஈவுத் தொகையைக் கொடுத்தும் வரவேண்டும். இப்படி நாம் இஸ்ரேலிய மக்களிடத்து உறுதி மொழி வாங்கியிருந்தும், உங்களுக்குள்ளே ஒருசிலரைத் தவிர்த்து மற்றவர்களெல்லாம் அதைப் புறக் கணித்து விட்டீர்கள். இன்னும் நீங்கள் வெறுப் புற்றவர்களாகவே இருக்கிறீர்கள். 83

இன்னும், 'நீங்கள் உங்கள் மக்களின் ரத்தத்தைச் சிந்த வேண்டாம். உங்கள் வீடு வாசல்களை விட்டு, உங்கள் மக்களை வெளியேற்ற வேண்டாம்'—இப்படி நாம் உங்களிடம் வாக்குறுதி வாங்கினோம். நீங்கள் வாக்கும் கொடுத்தீர்கள். சாட்சியாகவும் இருந் தீர்கள். 84

ஆனால், பிறகு உங்கள் மக்களை வதை புரிந்தீர்கள். அவர்களில் ஒரு பகுதியினரை அவர்களுடைய இடங்களை விட்டு வெளியேற்றினீர்கள். அவர்களை வதைப்பதில் ஒருவருக்கொருவர் உதவினீர்கள். மேலும் சிறைப்படுத்தி வைத்து அவர்களை விடுதலை செய்யப் பணம் வாங்கினீர்கள். ஆகவே நீங்கள் வேதத்தின் ஒரு பகுதியை நம்புகிறீர்கள்; மறுபகுதியைப் புறக்கணிக்கிறீர்கள். நீங்கள் செய்யும் இந்த வேலையில் உலக வாழ்க்கையின் இழிவைத் தவிர வேறு என்ன இருக்கிறது? மேலும் இறுதியான நியாயத் தீர்ப்பு நாளில் நீங்கள் கடுமையான வேதனையின் பக்கம் திருப்பி யனுப்பப் படுவீர்கள். அல்லா உங்களைக் கவனிக்காமலில்லை. 85

இறுதி வாழ்க்கைக்கு ஈடாக இந்தத் தாழ்ந்த உலக வாழ்க்கையை விலைக்கு வாங்குகிறவர்கள், அவர்கள் தான். ஆகையால் அவர்களது வேதனை கடுமையாக்கப்படும். அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது. 86

## பிரிவு—11 நபிகள் பெருமானை ஏற்க மறுப்பு

நாம்தாம் மூசாவுக்கு 'தவ்ருத்' வேதத்தை ஓதினோம். அவருக்குப்பின், ஒருவர் பின் ஒருவராக பல தூதர்களை நாம் அனுப்பியும் வைத்தோம். மேலும் மரியத்தின் மைந்தனை ஈசாவுக்கு நேரடியான பிரமாணங்களை நாம் அளித்து, பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு அவரைப் பலப்படுத்தியும் வைத்தோம். ஏன், நீங்கள் விரும்பாத ஒரு செய்தியோடு தூதுவர் ஒருவர் உங்கள்பால் வரும்போதெல்லாம் நீங்கள் ஆணவம் மிக்கவர்களாக இருந்தீர்கள். நம்பியவர்களைப் பொய்யர்கள் என்றீர்கள். இனி ஒரு பகுதியினரைக் கொன்றும் விடுவீர்கள். 87

நீங்கள், ''எங்கள் இதயங்கள் ஞானம் நிரம்பிய கிண்ணம்'' என்கிறீர்கள். தவறு. அல்லாவை நீங்கள் மறுத்த காரணத்தால் அவன் உங்களைச் சபித்து விட்டான். ஆகையால் நீங்கள் இறை நம்பிக்கை கொள்வது அற்பமே. 88

அவர்களுடைய வேதத்தை உறுதிப்படுத்தும் முறையில், இந்தத் திருமறை அல்லாவிடமிருந்து அவர்களுக்கு வந்தது. பழைய வேதத்தை நிராகரித்தவர்கள் மீது தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பது அவர்கள் பழக்கம். ஆனல் இந்தத் திருமறை அவர்களிடம் வந்து சேர்ந்தபோது அவர்களே இதை நிராகரித்து விட்டார்கள். ஆகவே அல்லாவின் சாபம் இந்த நாத்திகர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 89

அல்லா தன் அன்பர்களுக்குள்ளே யாரை விரும்புகிருனே, அவர்கள் மீது தன் அன்பைச் சொரிந்து இத் திருமறையைக் கொடுத்தான் என அவர்கள் கருதுகிருர்கள். இது பொருமை. இதனலேயே இந்தத் திருமறையை அவர்கள் வெறுத்தார்கள். அவர்கள் ஆத்மாக்களை மலிவான விலைக்கு விற்று விட்டார்கள். அது மிகவும் மோசமானது. அவர்கள் ஆத்திரத்துக்குப் பாத்திரமாகி விட்டார்கள். திருமறையை நிராகரிப்பவர்களுக்குக் கொடுமையான முடிவே காத்திருக்கிறது. 90

அல்லாவின் அருளுக்குப் பாத்திரமான இத் திருமறையின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட போது, ''எங்களுக்கு இறைவன் கொடுத்த வேதத்தின் மீது நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிருேம்'' என்று அவர்கள் கூறுகிருர்கள். மேலும் அவர்களிடமிருக்கும் அதே வேதத்தை நியாயப்படுத்துகின்ற வேதமாக இந்த 'குர்-ஆன்' இருந்து வரும் போது, அவர்கள் 'தவ்ருத்'தைத் தவிர மற்றவற்றை எல்லாம் நிராகரிக்கிருர்கள். 'அப்படியென்ருல், நீங்கள் உண்மையான விசுவாசிகள் தானென்ருல், முன்பு ஏன் அல்லாவின் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தீர்கள்?' என்று ஏ, திருத்தூதரே! நீர் கேட்பீராக! 91

மேலும் மூசா திட்டவட்டமான பிரமாணங்களுடன் உங்கள் முன் வந்தார். அவரையும் ஏய்த்துக் கன்றுக்குட்டியைக் கடவுளாக மாற்றிக் கொண்டீர்கள். நீங்கள் அக்கிரமக்காரர்களானீர்கள். 92

மேலும் நாம் உங்களிடமிருந்து உறுதிமொழி ஒன்று வாங்கிக் கொண்டு, உங்களுக்கு மேலே சினைக் குன்றை உயர்த்திக் காட்டிய போது, ''நாம் உங்களுக்கு அளித்திருப்பதை பலங்கொண்டு பற்றிப் பிடித்து, கீழ்ப்படிந்து நடங்கள்'' என்று சொன்னோம். அதற்கு நீங்கள், ''நாங்கள் செவி மடுக்கிறோம். ஆனால், அதற்கு மாறாகவே நடப்போம்'' என்றீர்கள். மேலும் நீங்கள் உங்கள் மறுப்பின் காரணத்தால் உங்கள் இதயங்களுக்குள்ளே கன்றுக்குட்டியால் மூட்டப்பட்டு விட்டீர்கள். ஏ, திருத்தூதரே! நீர் சொல்வீராக. 'நீங்கள் உண்மை விசுவாசிகளாக இருந்தால் உங்கள் நம்பிக்கை உங்களை எதைக் கொண்டு ஏவுகிறதோ, அது கெட்டதே'. 93

மேலும், ஏ, திருத்தூதரே! நீர் சொல்வீராக. அல்லாவின் இறுதி வீடு மற்றவர்களுக்குக் கிடைக்காமல் உங்களுக்கே சொந்தமாக இருந்தால்—நீங்களும் உண்மையுள்ளவர்களாக இருந்தால்—எங்கே அல்லாவிடம் மரணத்தைக் கேளுங்கள் பார்ப்போம். 94

மேலும் அவர்களின் கரங்கள் கறையாகி விட்டதன் காரணத்தால், அவர்கள் மரணத்தை ஒரு போதும் விரும்ப மாட்டார்கள். அக்கிரமக்காரர்களை அல்லா நன்றாக அறிவான். 95

மானிட ஜாதியிலேயே அவர்கள் பேராசை பிடித்தவர்கள். இறைவனுக்கு இணையாகத் தன்னை நினைப்பவனைக் காட்டிலும் மோசமானவர்கள். அவர்களுள் ஒருவன் தனக்கு ஆயிரம் ஆண்டுகள் ஆயுள் வேண்டும் என்று கேட்கிறான். நீண்ட ஆயுள் கிடைத்தால் அவன் வேதனையை விட்டு விலகி விடுவானா? அவர்கள் செய்வதை அல்லா அறிந்தவனாகவே இருக்கிறான். 96

## பிரிவு—12 நபிகள் பெருமான் மீது பகைமை

“எவன் ஒருவன் ஜீப்ரீலுக்குப் பகைவனோ, அவன் அல்லாவுக்கும் பகைவன்”, என்று ஏ, நபியே, நீர் கூறுவீராக. நிச்சயமாக அவன் திரு-குர்ஆனுக்கு முன்புஇருந்த வேதத்தை மெய்ப்பிக்கிறான். இறை நம்பிக்கை கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டுகிறான். நற்குருவாகவும் விளங்குகிறான். நற்செய்தியாக விளங்குகிற இத் திருமறையை அல்லாவின் கட்டளைப்படி உமது இதயத்தின் மீது இறக்கி வைத்தான். 97

எவனொருவன் அல்லாவுக்கும், அவனுடைய அமரர்களுக்கும், தூதர்களுக்கும் ஜீப்ரீலுக்கும், மீக்காலுக்கும் பகைவனாக இருக்கிறானோ அப்படிப்பட்ட எதிர்ப்பாளனுக்கு நிச்சயமாக அப்போது அல்லாவே பகைவனாக இருக்கிறான். 98

ஏ, நபியே! நாம் உம்மிடம் தெள்ளத் தெளிந்த தூதுச் செய்திகளையே அள்ளித் தந்திருக்கிறோம். எல்லை கடந்த மூடர்களைத் தவிர வேறு எவரும் இதை மறுக்க மாட்டார்கள். 99

அவர்களோடு ஒப்பந்தத்துக்கு வரும்போதெல்லாம் அந்த ஒப்பந்தத்தை ஒரு பகுதியினர் மட்டுமா தூக்கியெறிகிறார்கள்? இல்லை, அவர்களில் பெரும்பாலோர் இறை நம்பிக்கை கொள்வதில்லை. 100

அவர்களிடமுள்ள, ‘தவ்றாத்’ வேதத்தை நியாயப்படுத்தும் வகையில், அல்லாவிடமிருந்து ஒரு தூதர் அவர்களிடம் வந்தபோது, ஒரு பகுதியினர் தாங்கள் எதையும் அறியாதவர்கள் போல அல்லாவின் திருமறையை தங்கள் முதுகுக்குப் பின்னால் தூக்கியெறிந்து விட்டார்கள். 101

மேலும் அவர்கள் சுலைமானின் அரசாங்கத்திற்கு எதிராக சைத்தான்கள் கற்பனை செய்தபடி, அந்தக்

கற்பனையையே பின்பற்றி நடக்கிறார்கள். சுலை
மான் சத்தியத்தை நிராகரிக்கவில்லை. ஆனால்
சைத்தான்கள் தான் மனிதருக்குச் சூனியத்தைக்
கற்றுக் கொடுத்து நாத்திகர்களாக்கி விட்டார்கள்.
பாபிலோனில் உள்ள ஹாரூத் மாரூத் என்னும்
இரு வானவர்கள் மீது, அந்தச் சூன்யம் இறக்கப்
படவுமில்லை. அவர்கள் 'நாங்கள் வெறும் சோதனை
களாகவே இருக்கிறோம். ஆகையால் நீங்கள் எங்களை
நிராகரித்து விடாதீர்கள்' என்று கூறி, எவனொரு
வனுக்கும் அந்தச் சூன்யத்தை அவர்கள் கற்றுக்
கொடுக்கவும் இல்லை. ஆகையால் அவர்கள்
மேற் சொன்ன இரண்டின் அடிப்படையில்
கணவனுக்கும், மனைவிக்கும் இடையே எதனைக்
கொண்டு மாறுபாட்டை ஏற்படுத்தி வருகின்றார்
களோ, அந்த மாறுபாட்டையே கற்றுக் கொள்
கிறார்கள். மேலும் அவர்கள் அல்லாவின் அனுமதி
யின்றி, அதைக் கொண்டு எவருக்கும் தீங்கிழைக்க
இயலாது. தங்களுக்கு லாபம் இல்லாமலே தீங்
கிழைக்கக் கற்றுக் கொள்கிறார்கள். மேலும் எவன்
அந்தச் சூன்யங்களைக் கிரையம் செய்கிறானோ,
அவனுக்கு இறுதியில் யாதொரு சுகமுமில்லை,
என்பதை அவர்களே அறிவார்கள். எதற்காக
தங்கள் ஆத்மாக்களை அவர்கள் விற்று விட்டார்
களோ, அது மோசமானதே. அவர்களே இதனை
அறிவார்கள். *102*

அவர்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்தும்,
தீமையிலிருந்து விலகியும் இருந்திருந்தால், அல்லா
விடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் பரிசு,
நிச்சயமாக உயர்வாகவே இருந்திருக்கும். அவர்கள்
இதனையும் அறிவார்கள். *103*

## பிரிவு—*13* வேதங்களில் மாறுதல்

இறைவன் சொன்னான்: ஏ, நம்பிக்கை கொண்ட
மக்களே! நீங்கள் திருத்தூதரின் கவனத்தைக் கவர

விரும்பும் போது, ''தயவு செய்து இதைக் கொஞ்சம் கேட்கிறீர்களா?'' என்று கேளுங்கள். தெளிவற்ற, மரியாதைக் குறைவான, இரு பொருள் தரக் கூடிய சொற்களைப் பயன்படுத்தாதீர்கள். அவர் கூறுவதைக் கவனித்துக் கேளுங்கள். இதைப் புறக்கணிப்பவர்களுக்குத் தீராத வலியும், வேதனையும் உண்டு. 104

வேதங்களைப் பெற்றிருப்பவர்க்குள்ளேயே அதைப் புறக்கணிப்பவர்களும் இருக்கிறார்கள்; இறைவனுக்கு இணையாக வேறெதையும் வணங்குகிறவர்களும் இருக்கிறார்கள். உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு நல்லது எதுவும் வருவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆனால் அல்லா, தான் விரும்புகிறவர்களுக்கே கருணையைப் பொழிகிறான். உண்மையில் அல்லா பெரும் கொடை வள்ளலாக இருக்கிறான். 105

முன்பு நாம் அனுப்பிய தூதுச் செய்தியை மாற்றி விட்டோம். மறக்கடிக்கச் செய்து விட்டோம். அதைவிட உயர்ந்ததையும், அதைப் போன்றதையும் இங்கு தருகிறோம். எல்லாவற்றின் மீதும் அல்லா பேராட்சி புரிகிறான் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? 106

வானம் பூமி இரண்டுக்கும் உரிய மேலாதிக்கம் அல்லாவினுடையது. இதை நீங்கள் அறியவில்லையா? உங்களுக்கு அல்லாவை விடச் சிறந்த உதவியாளனுமில்லை, சிறந்த நண்பனுமில்லை. 107

முன்பு இஸ்ரேலியர்கள் மூசாவைக் கேட்டதுபோல நீங்களும் உங்கள் திருத்தூதரைக் கேட்பீர்கள் என்பதை நான் அறிவேன். இறை நம்பிக்கையின் விரோதி, நிச்சயமாக நேர்வழியை இழந்து விட்டவனே. 108

வேதங்களைப் பெற்றிருப்பவர் பலர் தங்களுக்குள் பொறாமையுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மை என்னவென்று தெரியும். இருந்தும் உங்கள் இறை நம்பிக்கையைப் பார்த்து உங்களை நாத்திகர்களாக மாற்ற முயற்சிக்கிறார்கள்.

ஆண்டவன் கட்டளை வரும் வரை அவர்களை மன்னித்து விடுங்கள். அல்லா நிச்சயமாக எல்லா வற்றின் மீதும் பேராட்சி செலுத்துபவனாக இருக் கிறான். 109

தொழுகையை நேர நியதிகள் தவறாது நீங்கள் கடைப்பிடியுங்கள். உங்கள் செல்வத்தில் ஏழை களுக்கு அளிக்க வேண்டிய விகிதத்தை முறையாகக் கொடுங்கள். நீங்கள் இப்போது செய்கின்ற எல்லா நன்மைகளையும், பின்னர் அல்லாவிடம் வரும் போது அங்கு காண்பீர்கள். 110

யூதர்களும், கிறிஸ்தவர்களும், ''தங்களைத் தவிர வேறு எவரும் சொர்க்கப் பூங்காவுக்குள் நுழைய முடியாது'' என்று கூறி வருகிறார்கள். அது அவர் களது வெறும் ஆசை, சபலம். அவர்கள் கூறுவது உண்மையானால் அதற்கான ஆதாரத்தைக் கேளுங்கள். 111

அவர்கள் கூற்று உண்மையல்ல. அல்லாவின் அடியில் யார் முடி சாய்த்துத் தொழுது மக்களுக்கு நன்மை செய்கிறார்களோ, அவர்களுக்குரிய பரிசை இறைவன் தருகிறான். அவர்களை அச்சம் நெருங்க முடியாது. துயரம் தொடர முடியாது. 112



## பிரிவு—14 இஸ்லாமிய நேர்வழி

எல்லோரும் பின்பற்றுவது ஒரே வேதந்தான். ஆனால் கிறிஸ்தவர்கள் நன்முறையைப் பின் பற்றுவதில்லை என்று யூதர்கள் கூறுகிறார்கள். அதே போல யூதர்கள் எந்த நல்லதையும் பின் பற்றுவதில்லை என்று கிறிஸ்தவர்கள் கூறு கிறார்கள். அவ்விருவரையும் போலவே பிற மதங்களைச் சேர்ந்தவர்களும் அறியாமல் கூறு கிறார்கள். எந்தெந்த விஷயங்களை இவர்கள்

கேள்விக் குறியாக்குகிருர்களோ, ந்த விஷஅ யங்கள் அனைத்தையும் இறுதியான நியாயத் தீர்ப்பன்று அல்லா கவனிப்பான். அப்போது இவர்களும் அங்கே இருப்பார்கள். 113

அல்லாவின் பள்ளியில் அவனை மண்டியிட்டு வணங்குவோரைத் தடுப்பவர்கள், அவனது பள்ளிவாசல்களை இடிப்பவர்கள். அவர்களே உலகத்தின் கடைகெட்ட அநியாயக்காரர்கள். அப் பள்ளிகளில் நுழைய இவர்களுக்குத் தகுதி யில்லை. அப்படிச் செய்பவர்களுக்கு இம் மண் ணுலகிலேயே அவமானம் நேரிடும். இறுதி நியாயத் தீர்ப்பிற்குப் பிறகு கொடிய நரக வேதனையை அவர்கள் அனுபவிப்பார்கள். 114

கிழக்கும் மேற்கும் அல்லாவிற்கே உரியவை. நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினுலும் அந்தப் பக்கத்தில் அல்லாவின் நியாய ஒளியே நிற்கிறது. அல்லா நிச்சயமாக எல்லையிலா அருளாளன். இணையில்லா அறிவுடையோன். 115

கிறிஸ்தவர்களும் யூதர்களும், 'அல்லா தமக் கொரு தேவகுமாரனை ஈன்றெடுத்துக் கொண் டான்' என்று கூறுகிருர்கள். அவனே மிகப் புனிதன். வான மண்டலத்திலும் பூமியிலும் இருப்பது அனைத்தும் அவனுக்கே உரியவை. அவனுக்கு அடிபணிந்தே எல்லாம் நடக் கின்றன. 116

வான மண்டலத்தையும் பூமியையும் அற்புத வடிவில் தோற்றுவித்தவன் அவன்; ஒன்றைச் செய்ய நினைத்து, ''அது நடக்கட்டும்'' என்று அவன் கூறியவுடனேயே அது நடந்து விடு கின்றது. 117

''அல்லா எங்களுடன் ஏன் பேசுவதில்லை; ஏன் எங்களுக்கு ஒரு அடையாளமும் காட்டுவ தில்லை?'' என்று அறிவில்லாத மக்கள் கேட்கி ருர்கள். இவர்களுக்கு முன்பு இருந்தவர்களும் இப்படித்தான் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் இருவரது இதயங்களும் இந்த வகையில் சேர்ந்து கூத்தாடுகின்றன. நம்மீது நம்பிக்கை

கொண்ட மக்களுக்கு நிச்சயமாகத் தூதுச் செய்தி களை நாம் அளித்திருக்கிறோம்; அளித்துக் கொண்டேயிருக்கிறோம். 118

நிச்சயமாக ஏ, திருத்தூதரே, உம்மை நம்பும் நல்லடியார்களுக்கு நற்செய்தி கூறுவதற்கும், தீயவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வ தற்கும் உம்மை நாம் சத்தியம் என்னும் ஆயு தத்துடன் அனுப்பியிருக்கிறோம். நரகத் தீயில் கிடப்பவர்களின் கணக்கை உம்மிடம் கேட்க மாட்டோம். 119

நீர் யூதர்களின் மதத்தைப் பின்பற்றினால் ஒழிய அவர்கள் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினால் ஒழிய கிறிஸ்தவர்களும் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். எனவே நீர் உறுதியாகக் கூறுவீராக: ''அல்லாவின் வழியே எல்லோருக்கும் நல்ல வழி''என்று. உமக்கு நாம் கூறியுள்ள இந்த அறிவுரையை மீறி அவர் களைத் திருப்திப்படுத்த நீர் செயல்பட்டால் அல்லா விடமிருந்து உமக்குப் பாதுகாப்புமில்லை; உதவியு மிருக்காது. 120

யாருக்காக இத் திருமறையை நாம் அளித்திருக் கிறோமோ, அவர்கள் இதைப் பின்பற்றி நடக்க வேண்டிய முறைப்படி பின்பற்றி நடக்கிறார்கள். இத் திருமறையின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதைப் புறக்கணிப்பவர் கள்தாம் பெரும் இழப்புக்குரியவர்கள். 121

## பிரிவு—15 இப்ராஹீம் நபியுடன் ஒப்பந்தம்

ஏ, இஸ்ரேலிய மக்களே! நான் உங்களுக்கு அளித்த அருட் கொடைகளையும், உங்களை இவ்வுலக மக்க ளினத்தில் உயர்த்தி வைத்ததையும் மறந்து விடா தீர்கள். 122

ஒரு ஆத்மாவிற்கு மற்றொரு ஆத்மா உதவ முடியாத நாள் ஒன்று உண்டு. மற்றவர்களுக்காகப் பதில் சொல்லவோ பரிந்து பேசவோ முடியாத நாள் ஒன்று உண்டு. மற்ற ஆத்மாக்களிடமிருந்து எந்த வசதியும் உதவியும் இல்லாமல் போகின்ற அந்த நாளைச் சந்திக்க உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். 123

இப்ருஹீம் நபிக்கு அவருடைய காவலன் சில கட்டளைகளை இட்டு சோதித்தான். அவர் அவைகளைப் பூர்த்தி செய்து வைத்தார். ''உம்மை மனிதர்களுக்கு நிச்சயமாக தலைவனுக்கி வைப்பேன்'' என்று இறைவன் கூறினான். 'இந்த வாக்குறுதி என்னுடைய சந்ததிக்குமா' என்று இப்ருஹீம் நபி கேட்டார். ''எனது வாக்குறுதி அக்ரமக்காரர்களை உள்ளடக்காது'' என்று இரண்டு பொருளில் பதிலளித்தான் இறைவன். 124

மெக்காவில் இருக்கும் 'காஃபா' பள்ளியை எல்லா மனிதர்களும் கூடுமிடமாகவும் தஞ்சமடையும் ஸ்தலமாகவும் ஆக்கினோம். 'அங்கு இப்ருஹீம் நபி நின்ற இடத்தை நீங்கள் தொழுவதற்கான இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள்' என்று மக்களுக்குக் கூறினோம். மேலும் 'அப்பள்ளியை தரிசிக்க வருவோர்க்காகவும், அதில் தியானம் செய்யத் தங்குவோர்க்காகவும், தொழுகைக்காக அங்கு தலை சாய்ப்பவர்களுக்காகவும் அந்த இடத்தைப் புனிதமாக வைத்திருங்கள்' என்று இப்ருஹீம் நபிக்கும் அவருடைய மகன் இஸ்மாயீலுக்கும் நாம் கட்டளையிட்டோம். 125

''இந்த மெக்கா நகரத்தை அபயம் அளிக்கும் நகரமாக்கி, இறைவன் மீதும் அவனது இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை வைத்துள்ள அந் நகர மக்களுக்கு கனிவர்க்க உணவுகளையும் அளித்தருள்வாய் இறைவா'' என்று இப்ருஹீம் நபி கேட்டார். அதற்கு இறைவன், ''சத்தியத்தைப் புறக்கணித்த நாத்திகனுக்குக்கூட சிறிது சுகானுபவங்களை நான் அளிப்பேன்'' என்றான்; ''பிறகு அத்தகையோரை நரகத்

தியின் பக்கம் ஓட்டி விடுவேன். அவர்கள் போய்ச் சேருமிடம் மீள முடியாத பாதாளம்'' என்றான் இறைவன். 126

இப்ராஹீம் நபியும் அவருடைய மகன் இஸ்மாயீலும் 'காஃபா' என்னும் இறைவனின் அந்த முதற்பள்ளியை புதுப்பித்து புதிய அடிக் கல்லும் நாட்டினார்கள். நாட்டிய பின், ''எங்கள் இறைவா! எங்களிடமிருந்து இந்தப் பள்ளியை ஏற்றுக் கொள்வாயாக; நீ எல்லாவற்றையும் கேட்பவன்; அனைத்தையும் அறிந்தவன்'' என்று பிரார்த்தித்தார்கள். 127

''எங்கள் இறைவா! எங்கள் இருவரையும் உன்னைத் தொழுது மண்டியிட்டு தலை சாய்ப் பவர்களாக ஆக்கி வைப்பாய்; எங்கள் சந்ததியில் ஒரு பிரிவினரை உன்னைத் தொழ மண்டியிட்டு தலை சாய்ப்பவர்களாக ஆக்கி வைப்பாய்; வணக்கத்திற்கான உரைகளை இயற்றித் தருவாயாக; எங்களுக்கு உனது கருணை முகத்தைக் காட்டுவாயாக; மீண்டும் மீண்டும் எம்மைத் தேடுபவன், நாடுபவன், திரும்பிப் பார்ப்பவன் நீயே; கண்ணியன் நீயே; கருணை வள்ளல் நீயே; காவல் நாயகனும் நீயே! 128

''எங்கள் இறைவா! மேலும் எங்கள் வம்சத்திலிருந்து ஒரு இறைத் தூதரை (நபியை) ஏற்படுத்தி வைப்பாயாக. அந்தத் திருத்தூதர் மக்களுக்கு உனது தூதுச் செய்திகளை விளக்கிக் காட்டியும், திருமறையையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்தும் அவர்களைப் புனிதமாக்கி வைக்கட்டும். நிச்சயமாக நீ நல்லவன்; வல்லவன்; வேத நாயகன்; விவேகி; எல்லையிலா அருளாளன்; இணையில்லா அன்புடையோன்'' என்று பிரார்த்தித்தார்கள். 129

## பிரிவு—16 இப்ருஹீம் நபியின் மார்க்கம்

தன்னைத் தானே முட்டாளாக்கிக் கொள்கிறவன்
தான் இப்ருஹீம் நபியின் நல்வழிகளைப் புறக்
கணிக்கிறான். அவரை இம் மண்ணுலகில் நாம்
களங்கமில்லாத உத்தமராகப் படைத்து வைத்
தோம். மறுமை வாழ்விலும் நிச்சயமாக அவர்
நல்லவர்களுடன் இருப்பார். 130

தலை சாய்த்துத் தன்னைத் தொழும்படி அவருக்கு
இறைவன் கூறினான். ''எல்லா உலகங்களையும்
படைத்துக் காத்து அழிக்கின்ற இறைவனுக்குத்
தலைசாய்த்துத் தொழுகிறேன்'' என்று அவர்
கூறினார். 131

தம்முடைய மைந்தர்களுக்கும் இப்ருஹீம்
அதையே உபதேசித்தார். யாகூபும் அவ்வாறே
வலியுறுத்தினார். ''என் மைந்தர்களே! அல்லா
இந்த சன்மார்க்கத்தை நிச்சயமாக உங்களுக்
காகத் தேர்ந்தெடுத்திருக்கிறான். அவனைத் தொழுத
பின் மடிகின்றவர்களாக மாறுங்கள். 132

யாகூபுக்கு மரணம் வந்தது. இஸ்ரேலியர்களான
'யஹூதிகள்' அதற்கு சாட்சியாக இருந்தனர்.
அப்போது தம்முடைய பிள்ளைகளை அவர் கேட்
டார்: ''எனக்குப் பிறகு எதை நீங்கள் வணங்கு
வீர்கள்?'' என்று. இதற்கு அவருடைய பிள்ளைகள்
கூறினார்கள்: ''உமக்கும் உம்முடைய மூதாதை
யரான இப்ருஹீமுக்கும் இஸ்மாயீலுக்கும்
இஷ்ஹாக்குக்கும் எவன் மூலமோ, எவன் இறை
வனோ அவனையே தொழுவோம்''என்றார்கள். 133

நீங்கள் சொன்ன பெரியோர்கள் நன்கு வாழ்ந்து
மறைந்தவர்கள். அவர்கள் சேர்த்து வைத்தது
அவர்களுக்கு. நீங்கள் சேர்க்கப் போவதுதான்
உங்களுக்கு. அவர்களின் நன்மை தீமைகளுக்கு
நீங்கள் பதில் கூற வேண்டியிருக்காது. 134

கிறிஸ்தவர்களும் யூதர்களும் இஸ்லாமியர்களைப் பார்த்து, ''நீங்கள் யூதர்களாக அல்லது கிறிஸ்த வர்களாகவே இருங்கள், அதுதான் நேர்வழி'' என்று சொல்கிறார்கள். ஏ, திருத்தூதரே! அவர்களுக்கு நீர் கூறுவீராக: ''நீங்கள் தவறு செய்கிறீர்கள். சீராளன் இப்ருஹீமின் மார்க் கத்தையே நாங்கள் பின்பற்றுகிறோம். அவர் ஈடற்றவர்; இணையற்றவர்; என்றும் ஒரே இறை வனையே வணங்குபவர்,'' என்று கூறுங்கள். 135

இஸ்லாமியர்களாகிய நீங்கள் கூறுவீர்களாக: ''நாங்கள் அல்லாவை நம்புகிறோம். எங்களுக் காகத் தரப்பட்டுள்ள இத் திருமறையை நம்பு கிறோம். இப்ருஹீம், இஸ்மாயீல், இஷ்ஹாக், யாக்கூப் ஆகியோர்களுக்கும் அவர்களுடைய சந்ததியார்களுக்கும் வழங்கப்பட்ட வேதங் களையும் நம்புகிறோம். மூஸாவிற்கும் ஈசா விற்கும் அளிக்கப்பட்ட வேதங்களையும் நம்பு கிறோம். ஏனைய திருத்தூதர்களுக்கும் இறை வனால் அளிக்கப்பட்ட வேதங்களையும் நம்பு கிறோம். அவர்களில் எவரிடையேயும் நாங்கள் வேற்றுமை பாராட்டவில்லை. இறைவனுக்கு நாங்கள் தொழுது தலைசாய்க்கிறோம். 136

எனவே, நீங்கள் நம்பிக்கை கொள்வதுபோல அவர்களும் கொண்டால், நேர் வழியில் நடப் பார்கள். இதை மறுப்பார்களேயாயின், அவர்க ளெல்லாம் சத்தியத்தை மறுத்து ஒதுக்கும் நாத்திகர்களே. என்றும் அவர்களை எதிர்த்து இறைவன் உங்களுக்குத் துணையாக இருப்பான். அவன் எல்லாம் அறிந்தவன். நீங்கள் சொல்வதைக் கேட்பவன். உங்கள் உள்ளத்தையும் அறிந்தவன். 137

தேவ ஞானம் வழங்குவதில் அல்லாவைவிட வல்லவன் எவனும் இல்லை. அவனையே நாங்கள் வணங்குகிறோம்'' என்று கூறுங்கள். 138

ஏ, திருத்தூதரே! நீர் கூறுவீராக: ''அல்லாவைப் பற்றி நீங்கள் எங்களுடன் வாதிடாதீர்கள். அவன் எங்களை மட்டுமின்றி உங்களையும் காப் பவனாக இருக்கிறான். எங்கள் வினைப்பயன்கள்

எங்களுக்கு; உங்கள் வினைப்பயன்கள் உங்களுக்கு. நாங்கள் இறைவனுக்கு மட்டுமே திரிகரண சுத்தியுடன் இருக்கிறோம்'' என்று. 139

''இப்ராஹீமும், இஸ்மாயீலும், இஷ்ஹாக்கும், யாக்கூபும், யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தார்கள் என்று நீங்கள் மனப்பூர்வமாக நம்பிக் கூறுகிறீர்களா? நீங்கள் அதிகம் அறிந்தவர்களா, அல்லது அல்லாவா?'' என்று ஏ, திருத்தூதரே நீர் கேட்பீராக! அல்லாவிடம் இருந்து தனக்கு வந்திருக்கும் சாட்சியத்தை மறைப்பவனை விட அநியாயக்காரன் எவனுமில்லை. அல்லா உங்களைக் கவனிக்காமலும் இல்லை. 140

மேலே கூறிய பெரியவர்கள் வாழ்ந்து மறைந்தவர்கள். அவர்கள் சேர்த்து வைத்தது அவர்களுக்கு. நீங்கள் சேர்த்து வைக்கப் போவதுதான் உங்களுக்கு. ''அவர்களுக்கு நாங்களும் வாரிசுகள்தான்'' என்று நீங்கள் கூறுவதில் பொருளில்லை. அவர்களது நன்மை தீமைகளுக்கு நீங்கள் பதில் கூற வேண்டியிருக்காது. 141

(முதல் பாகம் நிறைவு பெறுகிறது)

# இரண்டாம் பாகம்

## அல் மதீனாவில் அருளப்பட்டவை

### பிரிவு—17 கா:பா பள்ளி—1

தங்களுடைய வணக்கத்திற்குரிய திசையை விட்டு விட்டு வேறு திசையை நோக்கி வணங்குகிறார்களே, இவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது என்கிறார்கள், மனிதர்களுள் மடையர்கள். ஏ, திருத்தூதரே! அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள்: ''கிழக்கும் மேற்கும் அல்லாவிற்கே உரியவை. தன் நல்லடியார்களை அவன் சரியான பாதையில் நடத்திச் செல்கிறான்'' என்று. 142

ஏ, இறை நம்பிக்கை கொண்ட மக்களே! நீங்கள் நடுநிலையில் இருக்கிறீர்கள். நாத்திகர்களைப் பற்றி நீங்கள் சாட்சியம் கூறுவீர்கள். உங்களைப் பற்றித் திருத்தூதர் சாட்சியம் கூறுவார். பின்னங்கால் பிடரியில் பட திரும்பி ஓடும் நம்பிக்கையற்றவர்களிடமிருந்து இத் திருத்தூதரை பின்பற்றுபவர்களைப் பிரித்து அறிய வேண்டும். வணக்கத்திற்குரிய திசையை அத் திருத்தூதர் மாற்ற விரும்பியது அதற்காகவே. இதுவரை அது கைகூடவில்லை. அல்லாவின் சாலையில் செல்வோர்களைத் தவிர மற்றவர்களுக்கு இது ஒரு சோதனையாகவே இருந்தது. அல்லா உங்கள் சமய உறுதியை வீணாக்குவதில்லை. அவன் எல்லையிலா அருளாளன். இணையில்லா அன்புடையோன். 143

ஏ, திருத்தூதரே! உமது முகம் பிரார்த்தனையின் போது வானத்தின் பக்கம் இயற்கையாகவே திரும்புவதை நாம் பார்க்கிறோம். ஆகையால் நீர் தொழ விரும்பும் திக்கை நோக்கி உம்மை நாம் திருப்பி வைப்போம். அந்த பரிசுத்தமான மெக்காவிலுள்ள காஃபா என்னும் ஆதிப் பள்ளியை நோக்கியே தொழும்போதெல்லாம் உமது முகத்தைத் திருப்புவீராக. ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எந்தத்

திசையில் இருந்த போதிலும் தொழும்போது, மெக்காவின் காஃபா பள்ளியை நோக்கியே உங்கள் முகங்களைத் திருப்புங்கள். இது இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையான செய்தி என்பதை நிச்சயமாக எல்லோரும் அறிவீர்கள். இதை மறுப்பவர்களை அல்லா கவனிக்காமல் இல்லை. 144

ஏ, திருத்தூதரே! முன்பு சில வேதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள், நீர் ஆயிரம் சாட்சியங்களைக் காட்டிய போதிலும், உம்முடைய இறை வணக்கத்திற்கான திசையைப் பின்பற்ற மாட்டார்கள். அவர்களுடைய இறை வணக்கத்திற்கான திசையை நீரும் பின்பற்ற முடியாது. மேலும் அவர்களுக்குள்ளேயே சிலர் தங்கள் திசையை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதில்லை. இறைவணக்கத்திற்கான சரியான திசையைப் பற்றிய அறிவு உமக்கு வந்த பிறகு, நீர் அவர்களுடைய விருப்பத்தைப் பின்பற்றினல் நீரும் அந்த அநியாயக்காரர்களைச் சேர்ந்தவராகிவிடுவீர். 145

நாம் யார் யாருக்கு முன்பு திருமறைகளை அருளியிருந்தோமோ அவர்கள், பிள்ளையை அடையாளம் காணும் அன்னையைப் போல இத் திருத்தூதரையும் அடையாளம் கண்டே இருக்கிருர்கள். ஆனல் அவர்களுக்குள் ஒரு சிலர் இந்த உண்மையை அறிந்தும் அறியாதவர்களைப் போல் நடிக்கிருர்கள். 146

ஏ, திருத்தூதரே! உண்மை என்பது உமது ரட்சகனிடமிருந்தே வந்திருக்கிறது. ஆகையால் நீர் சந்தேகப்படத் தேவையில்லை. 147



## பிரிவு—18 கா:பா பள்ளி—2

ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! ஒவ்வொருவருக்கும் தொழுகைக்கென்று முன்னேக்கி நிற்கும் திசை ஒன்று உண்டு. ஆகவே நலம்

பயக்கும் தொழுகையில் நீங்கள் மற்றவர்களை முந்திக் கொள்வீர்களாக! நீங்கள் எங்கெங்கு சிதறிக் கிடந்தாலும் அல்லா உங்களை ஒன்று திரட்டி வைப்பான். அல்லா நிச்சயமாக எல்லா வற்றிலும் பேராண்மை பெற்றவனாக விளங்கு கிறான். 148

ஏ, திருத்தூதரே! நீர் எந்தத் திசையிலிருந்து வந்து கொண்டிருந்த போதிலும், தொழும்போது உமது முகத்தை அந்தப் பரிசுத்தமான 'காஃபா' பள்ளியை நோக்கியே திருப்புவீர்! இது உம் முடைய இறைவனிடமிருந்து வந்துள்ள செய்தி யாகும். இது குறித்து வாதப் பிரதிவாதங்கள் செய்பவர்களை அல்லா கவனிக்காமல் இல்லை. 149

நீர் எந்தத் திசையிலிருந்து வந்த போதிலும் தொழும்போது, உமது முகத்தை அந்தப் புனித ஆலயத்தை நோக்கியே திருப்புவீராக! ஏ, இஸ் லாமியர்களே, அவர்களில் அநியாயக்காரர்களை யன்றி மற்ற மனிதர்களுக்கு உங்களிடம் வீண் குறை ஏற்படாது இருக்கட்டும். அவர்களுக்கு நீங்கள் அஞ்சாதீர்கள். பயமும் பக்தியும் என் னிடம் மட்டுமே செலுத்துவீர். எமது அருட் கொடையை உங்கள் மீது பரிபூரணமாக்கி வைக்கிறோம். நீங்கள் நேர் வழியைப் பெறுவ தற்காக, நீங்கள் எங்கிருந்த போதிலும், தொழும் போது உங்கள் முகங்களை, அந்தப் புனிதமான காஃபா பள்ளியை நோக்கியே திருப்பிக் கொள்ளுங்கள். 150

உங்கள் முன் எமது தேவ கட்டளைகளை ஓதிக் காண்பிக்கவும், இத் திருமறையையும் ஞானத் தையும் உங்களுக்குக் கற்பிக்கவும், உங்களுக்குத் தெரியாதவற்றைப் புரிய வைக்கவும், ஒரு திருத்தூதரை உங்களிடமிருந்தே தேர்ந்தெடுத்து உங்களிடம் அனுப்பி வைத்தோம். 151

எனவே எம்மைத் துதியுங்கள். நாம் உங்களைப் பெருமைப் படுத்துவோம். எமக்கே நன்றி செலுத்துங்கள். எக்காரணம் கொண்டும் நன்றி கொன்று விடாதீர்கள். 152

## பிரிவு—19 முயற்சி தேவை

ஏ, இறை நம்பிக்கை கொண்டோர்களே! பொறுமையினாலும், தொழுகையினாலும் இறைவனிடம் உதவி தேடுங்கள். அல்லா பொறுமைசாலிகளுடன்தான் இருக்கிறான். 153

அல்லாவின் பாதையில் நின்று, சத்தியத்துக்காகக் கொல்லப்பட்டவர்களை இறந்து விட்டவர்கள் என்று சொல்லாதீர்கள். இல்லை, அவர்கள் என்றும் உயிருடன் இருப்பவர்களே! நீங்கள் அதை உணர்ந்து தெளிய முடியாவிட்டாலும் அதுதான் உண்மை. 154

நாம் உங்களை பயத்தாலும், பசியாலும், பொருட்களாலும், உயிர்களாலும், உணவு வகைகளாலும் நிச்சயமாகச் சோதிப்போம். ஏ, திருத்தூதரே! இந்தச் சோதனைகளிலும் பொறுமை காட்டியவர்களுக்கு நீர் நல்வாழ்த்துக் கூறுவீராக! 155

தங்களுக்குக் கொடுந்துயரம் வந்து சூழும்போதும், ''நாங்கள் அல்லாவுக்கே உரியவர்கள்; அவனிடமே மீண்டும் செல்லப் போகிறவர்கள்'' என்று கூறுவோர்களே அவர்கள். 156

அவர்கள்தான் தங்கள் இறைவனின் ஆசீர்வாதத்தையும் கிருபையையும் பெற்றவர்கள். நேர்வழியில் நடப்பவர்களும் அவர்களே. 157

இப்ராஹீம் நபியின் இரண்டாவது மனைவியான ஹாஜரா, தன் மகன் இஸ்மாயீலின் தாகம் தணிக்க, 'சபா' மற்றும் 'மர்வா' குன்றுகளுக்கிடையே தண்ணீருக்காகப் பொறுமையுடன் இங்கும் அங்கும் தேடி அலைந்தது, நிச்சயமாக அல்லா காட்டிய அடையாளங்களுள் ஒன்றுதான்; (அப் பெண்மணிக்கு அப்போது நீர் அளித்த 'ஜம்ஜம்' என்னும் வற்றாத ஊற்றுதான் இன்றும் 'ஹஜ்' யாத்திரை செல்லும் லட்சக்கணக்கான

வர்களுக்கு அப் பாலைவனத்தின் நடுவே தாகம் தீர்க்கும் நீரூற்ருக விளங்குகிறது). ஆகவே, எவர் ஒருவர் 'ஹஜ்' யாத்திரைக்காக, அல்லது இறைவனின் ஆதிப் புனித ஆலயமான 'காஃபா'வை தரிசிக்கச் செல்கிருரோ, அவர் அந்த இரு குன்றுகளுக்குமிடையேசுற்றிச்சுற்றி ஓடுவதில் தவறில்லை. எவர் தாமாக முன்வந்து அதிகமான நன்மைகளைச் செய்கிருர்களோ, அவர்களுக்கு உரிய சிறப்பு அளிப்பதில் அதிகத் தாராளமாகவும், மிகுந்த அக்கரை உடையவனுகவும் அல்லா இருக்கிருன். 158

மனிதர்களுக்குத் தேவையானவற்றை இத் திருமறையில் விளக்கிய பிறகும், கண்கண்ட சாட்சியமாக ஒரு வழிகாட்டியின் மூலம் நாம் அளித்த இந்தத் திருமறையை மறைக்கின்றவர்கள், அல்லாவினுல் தண்டிக்கப் பட்டவர்களே. சக்தியுள்ள பெரியோர்களும் அவர்களைச் சபித்திருக்கிருர்கள். 159

கழிவிரக்கத்துடன் தங்களைத் திருத்திக்கொண்டும், சத்தியத்தை விளக்கிக் கூறியும் வருவோர்கள் பால் நான் கருணையுடன் திரும்புகிறேன். கருணையின் பொருட்டு நான் மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்க்கின்றவன்; என்றும் நான் கருணையுடையவன். 160

சத்தியத்தை நிராகரித்து விட்டு நாத்திகர்களாகவே இறந்து போகிறவர்கள் மீது அல்லாவினுடைய சாபமும், தேவர்களின் சாபமும் மற்ற எல்லா மனிதர்களுடைய சாபமும் அப்படியே பதிகின்றன. 161

அந்தச் சாபம் நீண்ட நெடுங்காலம் அவர்களுக்கு நிலைத்திருக்கும். அவர்களுடைய வேதனை சாதாரணமாக இருக்காது. அவர்களுக்கு என்றும் சாந்தி கிடைக்காது. 162

உங்களின் இறைவன் ஒரே ஒருவன் தான். அவனை விட வணக்கத்துக்குரியவன் யாருமில்லை. அவன் எல்லையிலா அருளாளன்; இணையில்லா அன்புடையோன். 163



## பிரிவு—20 ஏக நாயகன்

வான மண்டலமும் பூமியும் நிச்சயமாக அவனால் படைக்கப் பட்டுள்ளன. இரவும் பகலும் மாறி மாறி வரச் செய்திருக்கிறான் அவன். மனிதர்களுக்குப் பயன்படும்படி அவர்களின் பண்டங்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் கடலில் ஓடி ஆடுகின்றன. ஆகாயத்திலிருந்து மழையை அவன் இறக்குகிறான். காய்ந்து போன பூமியை அவன் தழைக்கச் செய்கிறான். சகலவிதமான ஜீவராசிகளையும் அதில் பரவச் செய்கிறான். மேலும், வானத்திற்கும் பூமிக்கும் இடையே உள்ள, மனிதனின் உபயோகத்திற்கான காற்றும் மேகங்களும், ஞானிகளுக்குத் தகுந்த சாட்சியங்களாக விளங்குகின்றன. 164

ஆனால், அல்லாவை அன்றி வேறு பொருட்களை வணக்கத்திற்கென வரித்துக் கொண்டு, அல்லாவை உவப்பதுபோலவே அவற்றையும் உவக்கும் மனிதர்கள் சிலர் இருக்கிறார்கள்; இறை நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாவை உவப்பதில் மிகவும் கண்டிப்புக் காட்டுங்கள். வேதனையைச் சந்திக்கும் போது அல்லாவின் சக்தியை நீங்கள் அங்கே கண்கூடாகக் காணுங்கள். எல்லா வல்லமையும் அல்லாவுக்கே உரியன. தண்டனை அளிப்பதில் அவன் மிகவும் கடுமையானவன். 165

தன்னைப் பின்பற்றியவர்களைக் கைவிட்டால், அப்படிக் கைவிட்டவர்கள் வேதனையைக் காண்பார்கள். அவர்களுக்கிடையே இருந்த தொடர்புகள் துண்டிக்கப்பட்டுப் போய்விடும். 166

''கைவிட்டுச் சென்றவர்கள் எங்களைக் கைகழுவியது போல, அவர்களை நாங்கள் கைகழுவ எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பாய் அல்லா'' என்று கைகழுவப்பட்டவர்கள் வேண்டுவார்கள். இப்படியாக அவர்களின் செயல்களுக்காக அவர்களே வருந்தும்படி இறைவன் ஆக்கி வைப்பான். மேலும் நரகத் தீயிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. 167

## பிரிவு—21 விலக்கப்பட்ட உணவுகள்

மக்களே! பூமியில் உள்ள நல்லனவற்றையும், முறையானவற்றையும் உண்ணுங்கள். சைத்தானின் பாதையைப் பின்பற்றாதீர்கள். அவன் உங்களுக்குப் பகிரங்கப் பகைவனாக மட்டுமே இருக்கிறான். 168

தீமையையும் கெட்ட நடத்தையையும்தான் அவன் உங்களிடம் தூண்டுகிறான். உங்களுக்குப் புரியாமலிருக்கிற விஷயங்களுக்கெல்லாம் அல்லா மீது பழி போடும்படி சொல்லிக் கொடுக்கிறான். 169

''அல்லா அருளியுள்ளதை பின்பற்றுங்கள்'' என்று அவர்களுக்குக் கூறினால், ''எங்கள் முன்னோர்கள் எப்படி இருந்தார்களோ அப்படியே நாங்களும் இருப்போம்'' என்கிறார்கள். என்ன ஆச்சரியம்! அவர்களுடைய முன்னோர்கள் விவரம் தெரியாதவர்களாகவும், நேர்வழி தெரிந்து நடக்க முடியாதவர்களாகவும் இருப்பினும் கூடவா அவர்களைப் பின்பற்றுவார்கள்? 170

சத்தியத்தை நிராகரித்து விட்டவர்களின் உவமை வெறும் கனைப்பும் ஓலமுமே. சத்தமே கேட்டறியாத பிராணிக்கு, வெறும் சத்தம் கொடுப்பவனுடைய உவமையை அது ஒத்திருக்கிறது. அவர்கள் செவிடர்கள், ஊமைகள், குருடர்கள்; எனவே அவர்கள் அஞ்ஞானிகள். 171

ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அனுமதித்துள்ள பொருள்களிலிருந்து நல்ல உணவுகளையும் உட்கொள்ளுங்கள். அல்லாவை வணங்குங்கள். அவனுக்கே நன்றியும் செலுத்துங்கள். 172

எவற்றையெல்லாம் நீங்கள் சாப்பிடக் கூடாது: நோயுற்றோ, இயற்கையாகவோ, தானாகவோ

மடிந்தவை; இரத்தம்; பன்றி இறைச்சி; அல்லாவின் பெயர் சொல்லாமல் வெட்டப்பட்ட பிராணிகளின் இறைச்சி இவையே. ஆனால் அதே சமயத்தில், விருப்பம் இல்லாமலும், எல்லை மீறாமலும், வேறு விதி இல்லாமலும் மேற்கூறியவற்றை நீங்கள் சாப்பிட நேர்ந்தால், அதனால் வரும் பாவம் உங்களை அண்டாது. நிச்சயமாக அல்லா உங்கள் தவறுகளையெல்லாம் பொறுத்தருள்வான். அவன் பேரன்புடையவன். 173

இத் திருமறையில் அல்லா கூறியிருப்பதை மறைத்து, அதற்காக சிறு விலைகளைப் பெறுகின்றவர்கள், தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் கட்டிக் கொள்கிறார்கள். இறுதித் தீர்ப்பு நாளில் அல்லா அவர்களை நோக்கித் திரும்பிப் பேச மாட்டான். அவர்களைப் புனிதப் படுத்தவும் மாட்டான். அவர்களுக்கு வேதனை தரும் தண்டனை உண்டு. 174

அவர்கள்தான் நேர்வழிக்குப் பதிலாக தவறான வழியில் நடப்பவர்கள். மன்னிப்புக்குப் பதிலாக தண்டனையைப் பெறுவோர்கள். ஓ! அக்கினியை அறைகூவி அழைப்பதில் இவர்கள் எத்தனை துணிச்சல் உடையவர்களாக இருக்கிறார்கள்! 175

சத்தியத்தைக் கொண்டே இத் திருமறையை அல்லா அருளி உள்ளான். அதனால் இதை மீறுகிறவர்களுக்கு அந்நிலை சர்வ நிச்சயம். இத் திருமறையை மறுப்பவர்கள் எதிர்ப்பு உணர்ச்சியில் அல்லாவிடமிருந்து நெடுந்தூரம் விலகிச் சென்று விடுகிறார்கள். 176



## பிரிவு—22 பழிவாங்கலும் மரண உயிலும்

தொழும் போது உங்கள் முகங்களை கிழக்கு அல்லது மேற்குத் திசை நோக்கித் திருப்பிக் கொண்டால் மட்டும் போதாது. அல்லாவையும், இறுதித்

தீர்ப்பு நாளையும், அமரர்களையும், திருமறையையும், திருத்தூதரையும் நம்பிக்கையுடன் மனதில் நிறுத்த வேண்டும். இறைவன் மீது வைத்துள்ள அன்பின் காரணமாக, உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளை மீட்கவும் செயலளவில் தாராளமாக அள்ளிக் கொடுக்க வேண்டும். தொழுகையை நியமத்துடன் செய்து, ஏழை விகிதத்தை முறைப்படி ஈந்தும் வருவோர்களே, நேர்மையாளர்கள். வாக்குறுதி கொடுத்து அதை நிறைவேற்றி வைப்பவர்களும், துன்பம், சங்கடம் நேரும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பவர்களும் நேர்மையாளர்களே. இவர்கள்தான் சமய உறுதியில் உண்மையானவர்கள். இத்தகையோர்கள்தான் தீமைகளிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்பவர்கள். 177

ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! கொலை செய்யப்பட்டால் உயிருக்குப் பதில் உயிரைப் பழிவாங்க உங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரமான மனிதன் கொல்லப் பட்டால், சுதந்திரமானவனைக் கொண்டும், அடிமைக்கு அடிமையைக் கொண்டும், பெண்ணுக்குப் பெண்ணைக் கொண்டும் பழி வாங்க வேண்டும். கொலை செய்யப்பட்டவரின் உடன் பிறந்தோரிடமிருந்து மன்னிப்புக் கிடைத்தால், இறந்தவனுக்கு ஈடு செய்ய, வழக்கத்தில் உள்ள முறை பின்பற்றப்பட வேண்டும். கணிசமான நஷ்ட ஈட்டுத் தொகையை மன்னிக்கப்பட்டவரிடமிருந்து பெற வேண்டும். இது உங்களுடைய இறைவன் அளித்த சுலபமான, கருணை மிக்க வழியாகும். இதற்குப் பிறகும், எவர் இந்த வரம்பை மீறுகிறாரோ, அவருக்குக் கொடிய வலியும் வேதனையும் உண்டு. 178

மேலும், உங்களைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டுப் பழிக்குப் பழி வாங்குவதில், நல்லறிவாளர்களின் எதிர்காலம் அடங்கிக் கிடக்கிறது. 179

உங்களுள் ஒருவருக்கு மரணம் நெருங்கினுல், அத்தகையோர் பெற்றோருக்கும் உற்றோருக்கும் சொத்துக்களை விட்டுச் செல்லும் நிலையில் இருந்தால், பெருந்தன்மையுடன், அதில் மூன்றில் ஒரு பகுதிக்குள் தர்மம் செய்ய வேண்டியது அத்தகையோர் மீது கடமையாக்கப் பட்டிருக் கிறது. இக் கடமை, தீமையிலிருந்து உங்களைத் தற்காத்துக் கொள்ள உதவுகிறது. 180

மரண உயிலாகச் சொல்லப்பட்ட அப்படிப் பட்ட தர்ம காரியத்தை காதில் கேட்டுவிட்டு, பின் யார் அதை மாற்றுகிறுர்களோ, அவர்கள் மீதே அதன் பாவச் சுமை எல்லாம் சேரும். அல்லா நிச்சயமாக எல்லாவற்றையும் கேட்கின்றவன்; அறிகின்றவன். 181

ஆனுல், மரணத்தின் போது செய்யப்பட்ட தர்ம அறிவிப்பில் அநியாயம் இருந்து, அதனுல் தர்ம அறிவிப்புச் செய்தவருக்குப் பாவம் சேரும் என்றுல் அந்த தர்ம அறிவிப்பை ஏற்று அனுபவிப்பவர் களுக்கிடையே நியாயமான சமரசம் செய்து வைப்பவர்கள் மீது குற்றமில்லை. அல்லா நிச்சய மாகப் பிழை பொறுப்பவன்; பேரன்பு மிக்கவன். 182

## பிரிவு—23 **ரமழான் நோன்பு**

ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! தீமையி லிருந்து உங்களைக் காத்துக் கொள்வதற்காக, உங்கள் முன்னேர்களுக்கு விதிக்கப் பட்டது போல, உங்களுக்கும் நோன்பு விதியாக்கப் பட்டிருக்கிறது. 183

குறிப்பிடப்பட்ட நோன்பு நாட்களில், யாரேனும் நோயாளியாகவோ, பிரயாணத்திலோ இருக்க நேர்ந்தால், அத்தகையோர், விடுபட்டுப்போன நாட்களுக்கு ஈடாக வேறு நாட்களில் நோன்பு

இருக்க வேண்டும். அவ்விதம் நோன்பு கடைப் பிடிப்பதைக் கடினமாக உணர்பவர்கள், ஒரு ஏழைக்கு ஆகாரம் அளித்துப் பரிகாரம் பெற வேண்டும். யார் அவ்விதம் வலிய அதிக நன்மைகளைச் செய்கிறார்களோ, அவர்களுக்கு அது மிகவும் நல்லது. விவரம் தெரியும் பருவம் வந்து விட்டால் நோன்பு நோற்பது உங்களுக்கு மிகவும் நல்லது. 184

மானிடர்களுக்கு வழி காட்டியாகவும், நேர் வழிக்கு நற்துணையாகவும், அசத்தியத்திலிருந்து சத்தியத்தைப் பாகுபடுத்திக் காட்டும் அத்தாட்சி யாகவும் இந்தத் திருகுர்—ஆன் எந்த மாதத்தில் அருளத் துவக்கப் பட்டதோ, அந்த ரமழான் மாதமே இந்த நோன்பைக் கடைப்பிடிப்பதற் கான மாதமாகும். உங்களில் யார் யார் அந்த மாதத்தில் தங்கள் இல்லங்களில் இருக்கி றார்களோ, அவர்களெல்லாம் இந்த மாதத்தில் நோன்பு இருக்க வேண்டும். பிணி அல்லது பிரயாணம் காரணமாக விடப்பட்ட நோன்பை வேறு நாட்களில் கடைப்பிடிக்க வேண்டும். அல்லா உங்களிடம் சாதாரணமான பொறுப் புக்களையே நாடுகிறான். அவன் உங்களிடம் கடினமானவற்றை நாடவில்லை. நீங்கள் அந்த நோன்பை எண்ணிப் பூர்த்தி செய்ய வேண்டும். உங்களை நேர்வழியில் நடத்தியதற்காக அல் லாவைப் பெருமைப்படுத்த வேண்டும். அவ னுக்கு நன்றி கூற வேண்டும். 185

ஏ, திருத்தூதரே! என்னைப் பற்றி உம்முடைய அடியார்கள் கேட்டால், நான் நிச்சயமாக அவர்களுக்கு மிக அருகிலேயே இருக்கிறேன் எனக் கூறுவீராக. தொழுகையின் போது என்னிடம் கூறப்படும் விண்ணப்பங்களுக்கு நான் விடை கூறுகிறேன். தாங்கள் நேர் வழியில் நடப்பதற் காக, அவர்கள் எனது குரலைக் கேட்கவும் வேண்டும். என்மீது நம்பிக்கையும் கொள்ள வேண்டும். 186

நோன்பு நாட்களின் இரவில் மனைவியுடன் உடல் உறவு கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்

பட்டுள்ளது. உங்கள் உடம்புக்கு ஆடையாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் உடம்புக்கு ஆடையாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் உங்களுக்கே அநீதி இழைப்பதை அறிந்தே அல்லா கருணையுடன் இந்தத் தடையை நீக்கி வைத்துள்ளான். அவர்களுடன் இணைந்து அல்லா உங்களுக்கு அளித்திருப்பதை அனுபவித்துக் கொள்ளுங்கள். மேலும், பொழுது விடிந்து, கறுப்புக் கயிறுக்கும் வெள்ளைக் கயிறுக்கும் வித்தியாசம் புரியும் அளவு வெளிச்சம் வரும் வரை, உண்ணவும் அருந்தவும் செய்யுங்கள். பிறகு இரவு வரும்வரை நோன்பைக் கடைப்பிடி யுங்கள். கடைசிப் பத்து நோன்பு நாட்களில், பள்ளிவாசலிலேயே தங்கி தீவிர நோன்பைக் கடைப்பிடிக்க விரும்புவோர்கள் மட்டும், அந்த நாட்களில் மனைவியுடன் உடலுறவு வைத்துக் கொள்ளாதீர்கள். இது அல்லாவின் வரைமுறை யாகும். தங்களைத் தீமைகளிலிருந்து தற்காத்துக் கொள்ள அல்லா தனது தூதுச் செய்திகளில் விளக்குகிறான். *187*

இன்னும், உங்களிடமுள்ள இன்னொருவருக்குச் சொந்தமாக வேண்டிய பொருளை நீங்களே, புசித்து விடாதீர்கள். மற்றவர்களின் சொத்தில் சாப்பிட விரும்பி, அதற்காக நீதிமன்றத்தை நெருங்காதீர்கள். *188*

## பிரிவு—24 தற்காப்புப் போர்

ஏ, திருத்தூதரே! புதுப்'பிறை' குறித்து உங்களிடம் கேட்கப்படுகிறது. அவை மனிதர்களின் வசதிக்காகவும், 'ஹஜ்' புனித யாத்திரைக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! எவரும் தங்கள் இல்லங்களுக்குள் புறக்கடை வழியே நுழையலா

காது. தீமையை விட்டு எவன் தன்னைத் தற்காத்துக் கொள்கிறானோ, அவனே நேர்மையானவன். உங்கள் இல்லங்களுக்கு அவற்றின் தலைவாசல் வழியே நுழையுங்கள். உங்களுடைய வெற்றிக்காக அல்லாவிடம் மிகக் கவனமாக இருங்கள். 189

உங்களுக்கு விரோதமாகப் போர் புரிகிறவர்களை எதிர்த்து நீங்களும் அல்லாவின் பாதையில் நின்று போர் புரியுங்கள். ஆனால் வலுச்சண்டைக்குப் போகாதீர்கள். வலுச்சண்டைக்குப் போகின்றவர்களை அல்லா நேசிப்பதில்லை. 190

உங்களை எதிர்த்து வலிய யுத்தத்துக்கு வருவோர்களை, கண்ட இடத்திலேயே கொல்லுங்கள். உங்களை வெளியேற்றி விட்டு அவர்கள் அபகரித்த இடத்திலிருந்து அவர்களை வெளியேற்றிவிடுங்கள். அவதூறு விளைவிப்பது கொலை புரிவதை விடக் கொடியது. எதிரிகள் அல்லாவின் பள்ளியில் புகுந்து உங்களுடன் போர் தொடுக்காத வரை நீங்களும் புனித ஆலயத்தி லிருந்துகொண்டு போரைத் தொடங்காதீர்கள். அவர்கள் போர் தொடுத்தால் மட்டும் நீங்களும் அவர்களை எதிர்த்து வதைக்கலாம். சத்தியத்தை மறுக்கிறவர்களுக்கு அப்படித்தான் எதிர்வரவு அமைகிறது. 191

அவர்கள் போரை நிறுத்தித் தாமாக விலகிக் கொண்டால், அல்லா நிச்சயமாக பிழை பொறுப்பவனாக இருக்கிறான். அவன் பேரன்புடையவன். 192

இறை நம்பிக்கையை மறுப்போர்களின் அவதூறுகள் ஒழிந்து, அல்லாவின் சன்மார்க்கம் நிலை நாட்டப்படும் வரை நீங்கள் போர் புரியுங்கள். ஆனால் அவர்கள் போரிலிருந்து விலகிக்கொண்டு விட்டால் அதன் பிறகு, அக்கிரமம் செய்வோரைத் தவிர பிறரிடம் பகைமை கூடாது. 193

போர் புரியலாகாது எனத் தடுக்கப்பட்டுள்ள புனிதமான நான்கு மாதங்கள் புனிதமானவையே. ஆனால் தடுக்கப்பட்டவைகள் அனைத்தும் இருதரப்புக்கும் பொதுவானவை. அதை மீறி வலுவில்

யார் உங்கள் மீது அக்கிரமம் புரிகிறார்களோ, அந்த அளவுக்கு நீங்களும் தடையை மீறலாம். உங்கள் கடமையில் எப்போதும் கவனமாகவும் இறை அச்சத்துடனும் இருந்து கொள்ளுங்கள். தங்கள் கடமைகளை முறையாகச் செய்கின்றவர் களுடன்தான் அல்லா இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். 194

இன்னும் அல்லாவின் வழியில் நீங்கள் செலவு செய்யுங்கள். உங்கள் கரங்களாலேயே உங்களை அழிவில் ஆழ்த்திக் கொண்டு விடாதீர்கள். மண் ணுயிர்களுக்கு நன்மை புரிவோர்களையே அல்லா நேசிக்கிறான். 195

அல்லாவுக்காக 'ஹஜ்' புனித யாத்திரையையும், உள்நாட்டு வாசிகள் வெளிநாடு போய் வந்ததும் மேற்கொள்ளும் 'காஃபா' பள்ளி தரிசனத்தையும் நிறைவேற்றுங்கள். நீங்கள் அவ்வாறு செய்ய இயலாமல் தடுக்கப்பட்டால், கிடைக்கக் கூடிய காணிக்கைப் பிராணியை மெக்காவுக்கு அனுப்பி விடுங்கள். அந்தக் காணிக்கைப் பிராணி தனக் குரிய இடம் போய் சேரும் வரை தலைமயிரை சிரைக்காதீர்கள். நோய் அல்லது புண் காரண மாக தலையை இக்காலத்தில் சிரைக்க நேர்ந்தால், அத்தகையோர் நோன்பு நோற்றோ, தர்மம் செய்தோ அல்லது காணிக்கை பலி கொடுத்தோ பரிகாரம் செய்யலாம். யார் 'ஹஜ்' யாத்திரை யையும், வெளிநாடு போய்த் திரும்பியதும் உள் நாட்டு வாசி மேற்கொள்ள வேண்டிய தரிசனத் தையும் ஒன்றாக்கிப் பயன் பெற்றார்களோ, அவர் கள் எளிதில் கிடைக்கும் எந்தப் பிராணியையும் உடன் எடுத்துப் போகலாம். அது இயலாதவர் 'ஹஜ்' யாத்திரைக்கு மூன்று நாட்களும், நாடு திரும்பியதற்கு ஏழு நாட்களும் நோன்பு இருக்க வேண்டும். இவை மொத்தம் பத்து நாட்கள் ஆகும். இந்த விதி புனித ஆலயம் இருக்கும் மெக்கா நகரில் குடியிராதவர்களுக்கு மட்டுமான தாகும். உங்கள் கடமையைச் செய்யும் போது, அல்லாவிடம் மிகவும் கவனமாக இருங்கள். பாவத்துக்குப் பதிலளிப்பதில் அல்லா மிகவும் கண் டிப்பானவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். 196

## பிரிவு—25 ஹஜ் யாத்திரை

ஹஜ் யாத்திரைக்குரிய மாதங்கள் தெளிவானவை. அம் மாதங்களில் ஹஜ் யாத்திரை மேற்கொண்டிருப்போர் தகாத வார்த்தைகளைப் பேசக்கூடாது. வசைமொழி பொழியக் கூடாது. சண்டை சச்சரவுகளில் இறங்கக் கூடாது. நீங்கள் நன்மையாக என்ன செய்கிறீர்களோ, அதனை அல்லா அறிகிறான். பிரயாணத்துக்கு வேண்டிய எல்லா கிரியைகளையும் ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். தன்னைத்தானே புனிதமாக வைத்துக் கொள்வது இந்த யாத்திரைக்கான கிரியைகளில் தலையாயதாகும். நல்லறிவு உள்ளோரே! எம்மிடம் உள்ள பய பக்தியில் மிகவும் கவனமாக இருந்து கொள்ளுங்கள். 197

உங்கள் பாதுகாவலனிடம் சகல சௌபாக்கியங்களையும் தரும்படி வேண்டுவது, இந்த யாத்திரையின் போது தவறாகாது. நீங்கள் இந்த யாத்திரையை முடித்து, ‘அரபாத்’ மைதானத்திலிருந்து விரைந்து திரும்பும் பொழுது, வழியில் உள்ள புனித ஞாபகச் சின்னத்தில் தங்கி அல்லாவைத் தியானியுங்கள். நீங்கள் முன்பு வழி தவறியவர்களாக இருந்து வந்த போதிலும், அதிலிருந்து உங்களை மீட்டு நேர்வழி காட்டியதற்காக அவனைக் குறித்துத் தியானியுங்கள். 198

பிறகு அந்த இடத்திலிருந்து மற்றவர்களுடன் விரைந்து புறப்படுங்கள். அல்லாவிடம் பிழை பொறுக்கும்படி வேண்டுங்கள். அல்லா பிழை பொறுப்பவனாகவே இருக்கிறான். நீங்கா அன்பு உடையவனாக இருக்கிறான். 199

உங்களுடைய வணக்கக் கடமைகள் முடிந்தபின், உங்கள் பிதாமகர்களை முன்பு மகிமைப் படுத்தியது போல, அல்லது அதையும் விடச் சிறப்பாக அல்லாவை மகிமைப் படுத்துங்கள். ‘‘எங்கள்

இறைவா! இந்தத் தாழ்ந்த உலகில் எங்களுக்கு உரியதை அளிப்பாய்'' என்று வேண்டுவோர்களும் ஒருசிலர் இருக்கிறூர்கள். அவர்களுக்கு அவ்வுலக இறுதி வாழ்க்கையில் ஒன்றும் பயனில்லை. 200

''எங்கள் இறைவா! இப் பூவுலகில் நன்மையான தையும், இறுதியான அவ்வுலகில் நன்மையான தையும் எங்களுக்கு அளித்திடுவாய்; எங்களை நரகத் தீயின் வேதனையை விட்டும் விலக்கி வைப் பாய்,'' என்று இரண்டையும் வேண்டுவோரும் இருக்கிறூர்கள். 201

அப்படிப்பட்டவர்களுக்கே அவர்கள் தேடிய பலன்கள் இவ்வுலகிலும், அவ்வுலகிலும் உண்டு. ஏனெனில் அல்லா கணக்கெடுப்பதில் வல்லவனுக இருக்கிறுன். 202

ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! குறிக்கப் பட்ட 'ஹஜ்' மாதம் பிறை 10, 11, 12 தேதி களில் 'மிஞ' வில் தங்கி தியானியுங்கள். யார் இரண்டே தினங்களில் திரும்பி விடுகிறுரோ அவர் மீது பாவமில்லை. ஹஜ் கடமைகளை முறையாகச் செய்தால் சரிதான். அல்லாவுக்கான உங்கள் கடமைகளில் எப்போதும் கவனமாக இருந்து கொள்ளுங்கள். நீங்கள் அவன் முன்னுல் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதை அறியுங்கள். 203

ஏ, திருத்தூதரே! இந்தத் தாழ்ந்த உலக வாழ்க் கைப் பிரச்னைகளில் தனது வார்த்தை ஜாலங் களால் உம்மை முகஸ்துதி பண்ணக்கூடிய மனிதர் களும் இருக்கிறூர்கள். அவர்கள் தமது அந்தரங்க சுத்தியைக் கூற அல்லாவையும் சாட்சிக்கு அழைப்பர். அவர்கள் எதிரிகளை விட மகாக் கொடியவர்கள். 204

அத்தகையோர், உம்மிடமிருந்து திரும்பிய வுடனே, விளைகின்ற பயிரையும் அழித்து நாசம் செய்வதே அகிலத்தில் அவர்களுடைய முயற்சியாக இருக்கும். அல்லா விஷமிகளை விரும்புவதில்லை. 205

''அல்லாவுக்கு அஞ்சி யிரு'' என்று அவர்களுக்குச் சொன்னுல், ஆணவம் அவர்களைப் பாவத்தின்

பக்கம் தள்ளிக் கொண்டு போய் விடுகிறது. அவர்களுக்கு நரகமே போதுமானது. அந்தத் தொட்டில்தான் அவர்களுக்கு ஏற்றது. 206

அல்லாவின் பிரியத்தைப் பெறும் பொருட்டு தன்னையே சர்வ பரித்யாகம் செய்கிறவரும் மனிதர்களுள் இருக்கிறார்கள். இத்தகைய அடி யார்களிடம் அல்லா கருணை மிக்கவனாக இருக் 207
கிறான்.

ஏ, இறை நம்பிக்கை கொண்டவர்களே! பரி பூரணமாக நீங்கள் சாந்தியில் -இஸ்லாமில்- ஒன்றி விடுங்கள். சைத்தானுடைய அடிச்சுவட்டைப் பின் பற்றாதீர்கள். அவன் என்றும் உங்கள் விரோதி 208
யாவான்.

உங்களுக்கு இந்த கண்கண்ட சாட்சியங்கள் வந்த பிறகும், நீங்கள் நழுவிப் பின்வாங்கினீர்களானால் ஒன்றை நினைவில் வையுங்கள். அல்லா வல்லமை 209
யுள்ளவன்; விவேகம் மிக்கவன்.

அல்லா அமரர்களுடன் மேகங்களுக்கு இடையில் இருந்து தோன்ற வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. எல்லா விஷயங்களும் ஏற்கனவே அல்லாவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இறுதி முடிவுக்காக எல்லா விஷயங்களும் அல்லாவிடமே மீண்டும் 210
வருகின்றன.

## பிரிவு—26 **சோதனைகளும் சங்கடங்களும்**

எத்தனை தெளிவான அத்தாட்சிகளை நாம் இஸ் ரேலியர்களுக்கு அளித்திருக்கிறோம் என்று, திருத் தூதரே! நீர் அவர்களைக் கேட்டுப் பாரும். அல்லாவின் அருட் கொடையான இத் திருமறை தன்னிடம் வந்த பிறகு யார் இதனை மாற்றுகி றாரோ, அந்தப் பாவத்திற்குத் தண்டனை வழங்கு

வதில் அல்லா மிகவும் கடுமையானவனாக இருக் கிறான் என்பதை அவர் அறியட்டும். 211

சத்தியத்தைப் புறக்கணிக்கும் நாத்திகர்களுக்கு இந்தத் தாழ்ந்த உலகின் வாழ்க்கை அலங்கார மாகத் தோற்றம் அளிக்கும்படி செய்யப்பட்டி ருக்கிறது. அவர்கள் இறை நம்பிக்கை கொண்ட வர்களை ஏளனமும் செய்கிறார்கள். ஆனால் தங்கள் கடமைகளை முறையாகச் செய்கின்றவர்கள், இறுதித் தீர்ப்பு நாளில் இவர்களை விட உன்னதப் பதவியில் இருப்பார்கள். தனக்குப் பிரியமானவர் களுக்கு அல்லா அளவற்ற கொடைகளை அளிக் கிறான். 212

மானிடர்கள் ஒரே இனத்தவராகத்தான் இருக்கி றார்கள். ஆனால் அவர்களிடையே தோன்றியுள்ள திருத்தூதர்கள் அவர்களுக்கு நற்செய்தி கூறுவோர் களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்க ளாகவும் இருக்கும்படி நாம்தான் ஏற்படுத்தி னோம். எதுபற்றி மனிதர்கள் விவகாரம் செய்து கொண்டு இருந்தார்களோ, அது குறித்து அவர் களுக்கு நியாயத் தீர்ப்பு அளிப்பதற்காக, சத்தி யத்தை உள்ளடக்கிய திருமறையை ஆக்கி வைத் தோம். முன்பு வேதங்களைப் பெற்றவர்களைத் தவிர மற்றவர்கள், தங்களிடம் கண்கண்ட சாட்சி யங்கள் வந்தபின் தங்களுக்குள் பொறாமையை வளர்த்துக் கொண்டு விவகாரம் செய்யவில்லை. எதன் மீது அவர்கள் விகற்பம் கொண்டார்களோ, அதன் உண்மையை அறிந்து உறுதி பூண்டவர்களை அல்லா பிரியத்துடன் நேர் வழியில் நடத்தியுள் ளான். தனக்குப் பிரியமானவர்களை அல்லா நேரான பாதையில் என்றும் நடத்தக்கூடியவன். 213

அல்லது உங்களுக்கு முன்னால் வாழ்ந்து சென்ற வர்கள் பெற்ற சோதனைகள் எதையும் பெறாம லேயே, நேரே சொர்க்கத்தின் வாசலினுள் நுழைந்து விடலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்களுடைய முன்னோர்கள் துன்பங்களாலும், துயரங்களாலும், சங்கடங்களாலும் பீடிக்கப்பட் டார்கள். திருத்தூதரும் அவர்மீது நம்பிக்கை

கொண்டவர்களும் கூட, ''அல்லாவின் உதவி எப்பொழுது வரும்'' என்று கதறுகிற வரையில் கடுமையாக அலைக்கழிக்கப் பட்டார்கள். அறிந்து கொள்வீர்! அல்லாவின் உதவி மிகப் பக்கத்தி லேயே இருக்கிறது. 214

எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்று, ஏ, திருத்தூதரே! அவர்கள் உம்மைக் கேட்கிறார்கள். நீர் சொல்வீராக: நீங்கள் செய்கின்ற செலவு பெற்றோர்களுக்கும், உற்றோர்களுக்கும், அனாதை களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கு மாக இருக்கட்டும். நீங்கள் எவ்வித நன்மைகளைச் செய்கிறீர்களோ, அதனை அல்லா அறிகிறான். 215

போர் என்பது வெறுக்கத் தக்கதாக இருப்பினும், உங்கள்மீது அது விதியாக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் ஒன்று. உங்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தும் ஒன்றை நீங்கள் வெறுக்கவும் கூடும். அதே போல, ஒன்று தீமை பயப்பதாக இருந்தாலும் அதை நீங்கள் விரும்பவும் கூடும். நீங்கள் அறி யாததை எல்லாம் அல்லா அறிந்தே இருக்கிறான். 216

## பிரிவு—27 இதர விஷயங்கள்

ஏ, திருத்தூதரே! புனிதமான நான்கு மாதங்களில் போர் புரியாதிருப்பது பற்றி உங்களிடம் அடிக்கடி உமது அடியார்கள் கேட்கிறார்கள். ''அப்போது போர்புரிவது பெரும் தவறு'' என்று அவர்களுக்குக் கூறுவீராக! அல்லாவின் பாதையில் செல்லவிடாது தடுப்பதையும், இறைவனையும் அவனது ஆலயத் தையும் நிராகரிப்பதையும், அதற்குரியவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதையும் அல்லா மிகக் கொடியதாகக் கருதுகிறான். இடையூறு ஏற் படுத்துவது கொலை செய்வதைவிடக் கொடிய தாகும். அவர்களின் பலம் கூடினால் சன்மார்க்

கத்தைவிட்டு உங்களைத் திருப்பும்வரை போர் புரிவார்கள். உங்களில் யார் சன்மார்க்கத்தை விட்டுத் திரும்பி, சத்தியத்தை நிராகரித்தவ ராகவே இறந்தும் போகிறாரோ, அத்தகையோர் இந்தத் தாழ்ந்த உலகிலும், இறுதி உலகிலும் தங்கள் செயல்களைப் பாழாக்கிவிட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் நரகத் தீயின் நண்பர்கள். அதிலேயே நீண்ட நெடுங்காலத்துக்கு வேகப் போகிறவர்கள். 217

இறை நம்பிக்கை கொண்டவர்களும், இல் லறத்தைத் துறந்து சேவையில் ஈடுபட்டவர் களும், அல்லாவின் பாதையில் செல்ல அதிகப் பிரயாசை எடுத்துக்கொள்பவர்களும், அல்லாவின் அருளையே ஆதரவாகக் கொண்டிருக்கிறார்கள். அல்லா பிழை பொறுப்பவனாக, பேரன்புடை யோனாக இருக்கிறான். 218

போதைப் பொருள்களைப் பற்றியும், சூதாட்டம் பற்றியும் ஏ, திருத்தூதரே! உமது அடியார்கள் உம்மைக் கேட்கிறார்கள். "அவ்விரண்டிலும் மனிதர் களுக்குப் பெரிய பாவமும் சிறியஇலாபமும் உண்டு. அவைகளினால் ஏற்படும் பாவம் அவைகளால் வரும் லாபத்தைவிட மிகப் பெரிதாக இருக்கிறது." என்று நீர் கூறுவீராக! 'நாங்கள் எப்படிச் செலவு செய்ய வேண்டும்' என அவர்கள் கேட்கிறார்கள். "ஓரளவாவது சேமிக்கக் கூடிய முறையில் செலவு செய்யுங்கள்" என்று விடை கூறுவீராக! நீங்கள் சிந்தித்துப் பார்க்கும் பொருட்டு, இப்படியாகத் தன் தூதுச் செய்திகளை இறைவன் விளக்கிக் காட்டுகிறான். 219

இவ்வுலகிலும் இறுதி உலகிலும் தங்களுக்குள்ள பொறுப்புகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். அனாதைகளைக் குறித்தும் வினவுகிறார்கள். "தங் களுக்கு நல்ல விளைவுகளைத் தரக்கூடியவற்றைச் செய்வது உத்தமமாகும். மற்றவர்களின் காரியங் களை உங்களுடையதாக ஏற்றுச் செய்தால் அவர் கள் உங்களுக்குச் சகோதரர்கள் ஆகிவிடுவார்கள்" என்று நீர் அவர்களுக்குப் பதில் கூறுவீராக! நன்மை என்ற பெயரில் விஷமம் செய்கின்றவர்களை

அல்லா பிரித்துப் பார்க்கிறுன். அல்லா விரும்பினுல், உங்கள் செயல்களையே உங்களுக்குச் சுமையாக்கி யிருப்பான். அவன் சர்வ வல்லமை உள்ளவன்; விவேகம் மிக்கவன். 220

மேலும் அல்லாவுக்கு இணையாக இன்னென்றை பூஜிக்கும் பெண்களை, அவர்கள் இறை நம்பிக்கை பெறும் வரை, இறை நம்பிக்கையுடையவர்கள் மணம் புரியாதீர்கள். அல்லாவுக்குச் சமமாக இணை வைத்துப் பூஜிக்கும் பெண் உங்களைப் பர வசப் படுத்தும் அழகியாக இருப்பினும், அல்லா மீது நம்பிக்கையுடைய அடிமைப் பெண் அவளை விடச் சிறந்தவளாவாள். இணை வைத்துப் பூஜிக்கும் ஆண்களுக்கும், அவர்கள் இறை நம் பிக்கை கொள்ளும் வரை, இறை நம்பிக்கையுள்ள பெண்களை மணம் முடித்து வைக்காதீர்கள். இணை வைத்துப் பூஜிக்கும் ஆண் உங்களைப் பரவசப் படுத்தும் பேரழகனுனை போதிலும், இறை நம் பிக்கையுடைய அடிமை நிச்சயமாக அவனைவிடச் சிறந்தவனுக இருக்கிறுன். இணை வைத்து வணங்கு வோர்கள் உங்களை நரகத் தீயின்பால் அழைத்துச் செல்கிறுர்கள். ஆனுல் அல்லா தன் கருணை யினுல் உங்களை சொர்க்கப் பூங்காவுக்கும், தன் மன்னிப்புக் கருணைக்கும் அழைத்துச் செல்கிறுன். இப்படியாக, சிந்தித்துப் பார்க்கும் பொருட்டு, மனிதர்களுக்குத் தன் தூதுச் செய்திகளை இறை வன் விளக்கிக் காட்டியுள்ளான். 221

## பிரிவு—28 'தலாக்' என்னும் விவாகரத்து

ஏ, திருத்தூதரே! மாதவிடாய் காலத்து உடலுறவு குறித்து உம்மைக் கேள்வி கேட்கிறுர்கள். அது உடலுக்குத் தீங்கு பயப்பதாகும். ஆகவே, மனைவி மார்கள் மாதவிடாயாயிருக்கும் காலத்தில் அவர்களை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்றும்,

சில தினங்களில் அவர்கள் சுத்தமான பிறகு உடல் உறவு கொள்ளலாம் என்றும் அவர்களுக்கு நீர் கூறுவீராக. அவர்கள் குளித்துப் புனிதமடைந்த பிறகு அல்லாவின் ஆணைப்படி நீங்கள் மனைவியரை அணுகலாம் என்றும் அவர்களுக்குச் சொல்வீராக. தன்னை நோக்கி அடிக்கடி திரும்புகிறவர்களை அல்லா நேசிக்கிறான். அதிலும் உடலையும் உள்ளத்தையும் பரிசுத்தமாக வைத்துக் கொண்டிருப்பவர்களை அவன் மிகவும் நேசிக்கிறான். 222

உங்கள் மனைவி உங்களுக்கு காலம், பருவம், சூழல் பார்த்து விதைத்துப் பயிர் செய்யும் கழனியாக இருக்கிறாள். எனவே கழனியை எப்போது எப்படி அணுக வேண்டுமோ, அப்படி அணுகுங்கள். அதே நேரத்தில் உங்கள் ஆன்மாக்களுக்கும் நலமானதைச் செய்யுங்கள். இறைவனுக்குப் பயந்து கடமையைச் செய்யுங்கள். நீங்கள் நிச்சயமாக இறைவனைச் சந்திக்கப் போகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இறை நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்திகளை ஏ, திருத்தூதரே, நீர் கூறுவீராக! 223

நன்மை செய்வதற்கும் அதற்கு மாறாக நடப்பதற்கும், மனிதர்களுக்குள் சமாதானம் செய்து வைப்பதற்கும் அல்லாவின் பெயரைப் பயன்படுத்திச் சத்தியம் செய்யாதீர்கள். அல்லா எல்லாவற்றையும் கேட்பவன்; எல்லாவற்றையும் அறிபவன். 224

சரியாக யோசித்துப் பாராமல் நீங்கள் அவசரத்தில் அளித்த சத்தியப் பிரமாணங்களுக்காக, அல்லா உங்களிடம் கணக்குக் கேட்க மாட்டான். ஆனால், வேண்டுமென்றே உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்றாகச் செய்யப்பட்டவைகளுக்குக் கணக்குக் கேட்பான். அல்லா பிழை பொறுப்பவனாகவும் அனைத்தையும் சகிப்பவனாகவும் இருக்கிறான். 225

தங்கள் மனைவியரை, முதல் '**தலாக்**' என்னும் விவாக விலகல் சத்தியம் செய்கிறவர்கள் நான்கு மாதங்கள் மட்டுமே காத்திருக்க வேண்டும். அதற்குள் அவர்கள் மீண்டும் இணைந்து விடுவார்களாயின், அல்லா அவர்களது பிழையைப்

பொறுப்பவனாகவே இருக்கிறான்; பேரன்புடையவனாகத் திகழ்கிறான். 226

ஆனால் அதற்குப் பிறகும்கூட, அவர்கள் 'தலாக்' என்னும் விவாக ரத்தைச் செய்துகொண்டு விடத் தீர்மானித்தார்களேயாயின் அல்லா அதையும் அறிகிறான். 227

'தலாக்' என்னும் விவாக ரத்துப் பெற்ற பெண்கள் மூன்று மாதவிடாய் காலத்திற்குத் தனியே காத்திருக்க வேண்டும். அவர்கள் அல்லாவின் மீதும் இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அவர்களுடைய கர்ப்பப் பையில் இறைவன் உற்பத்தி செய்திருப்பதை — அதாவது அவர்கள் கர்ப்பமுற்றிருப்பதை — அவர்கள் மறைப்பது நியாயமாகாது. இதற்கிடையில் கணவனுடன் இணக்கத்தை வேண்டுவாராயின் அப்படியே மீண்டும் இணைந்து கொள்ள அதிக உரிமை பெற்றிருக்கிறார்கள். இதில் ஆடவருக்கு இருப்பது போன்ற உரிமைகள் நியாய முறைப்படி பெண்களுக்கும் உண்டு. ஆடவர்களுக்கு பெண்களைவிட ஒருபடி உயர்வான உரிமையும் உண்டு. அல்லா வல்லமை உடையோனாகவும், விவேகம் மிக்கவனாகவும் இருக்கிறான். 228

## பிரிவு—29 'தலாக்' என்னும் விவாகரத்து—2

'தலாக்' என்னும் விவாக ரத்து இருமுறைதான் சொல்லப் படலாம். அதன் பிறகு சம்பந்தப்பட்ட கணவனும் மனைவியும் தோழமையுடன் இணைந்து கொள்ள விரும்பினால் இணைந்துகொண்டு விட வேண்டும். அல்லது சுமுகமாக மூன்றாவது 'தலாக்' என்னும் விவாக ரத்தை அறிவித்து விலகிக் கொண்டு விட வேண்டும். அல்லா நிர்ணயித்துள்ள வரைமுறைக்குள் நின்று வாழ

முடியாது போய்விடும் என்ற அச்சம் இருந்தாலொழிய, மனைவிக்கென்று ஏற்கனவே அளித்த எந்தப் பொருளையும் திரும்ப கணவன் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் அல்லாவினால் நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைக்குள் நின்று அவர்கள் இருவரில் எவரும் வாழ இயலாமல் போய் விடும் என்று மத்தியஸ்தர்கள் கருதினால், தன்னை விடுவித்துக் கொள்வதற்காக, மனைவி தன்னிடமிருப்பதை, தன்னால் விவாக ரத்துச் செய்யப்பட்ட கணவனுக்குக் கொடுக்க நேர்ந்தால், அதனால் அவ்விருவர் மீதும் குற்றம் ஏதுமில்லை. இது அல்லாவின் வரையறையாகும். அதை நீங்கள் மீறிச் செல்லாதீர்கள். அல்லாவின் வரையறையை மீறுபவர்கள் எல்லாத் துன்பங்களையும் அனுபவிப்பார்கள். 229

கணவனால் இறுதியாக 'தலாக்' என்னும் மூன்றுவது விவாக ரத்துச் செய்யப்பட்டுவிட்ட மனைவி, அதற்குப் பிறகு வேறொருவருக்கு மனைவியாகி, பின் அவரிடமிருந்தும் விவாக ரத்துப் பெற்றால் ஒழிய, முதல் கணவனால் மீண்டும் மணந்து கொள்ளப்பட முடியாது. அல்லாவின் இந்த வரையறைக்குட்பட்டு, 'தலாக்' என்னும் மூன்றுவது விவாக ரத்து அறிவிப்பைச் செய்யாமலேயே, அவர்கள் நீடித்து மீண்டும் இணைந்து வாழ விரும்பினால் அவர்கள்மீது குற்றமில்லை. இது அல்லாவின் வரைமுறையாகும். புரிந்து கொள்ளும் திறனுடையவர்களுக்கு அவன் இதை விளக்கிக் காட்டுகிறான். 230

பெண்களை 'தலாக்' என்னும் விவாகரத்துச் செய்து, அவர்கள் தாங்கள் தனித்திருக்க வேண்டிய காலக் கடமையைப் பூர்த்தியும் செய்து விட்ட பிறகு, அத்தகையோர்களை உரிய மரியாதையுடன் அன்பாக உங்களுடன் தங்கி இருக்க அனுமதியுங்கள். அல்லது சுயேச்சையாகப் போக விரும்பினால் அனுதாபத்துடன் அப்படியே செல்ல விட்டு விடுங்கள். அவர்களுக்குப் பாதகம் செய்யும் நோக்கத்துடன், அவர்கள் தனிமையைப் பயன்படுத்தி, அவர்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள். அப்படி

யாரேனும் செய்தால், அவர்கள் தன் சொந்த ஆத்மாவுக்கே தீங்கு இழைத்துக் கொள்கிறார்கள். அல்லாவின் தூதுச் செய்தியை வேடிக்கையாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அல்லா உங்களுக்கு அளித்துள்ள அருட் கொடைகளை நினைவு கூறுங்கள். இத் திருமறையின் மூலமாகவும், விவேகத்தின் மூலமாகவும் உங்களுக்கு அறிவுறுத்தும் அவனுடைய கருணையையும் நினைவு கூறுங்கள். அல்லாவிடம் உங்களுக்குள்ள கடமைகளில் எப்பொழுதும் மிக எச்சரிக்கையாக இருங்கள். அல்லா எல்லாவற்றையும் அறியக் கூடியவன் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். 231

## பிரிவு—30 மறுமணம்

பெண்களை ‘தலாக்’ என்னும் விவாகரத்துச் செய்தபின், அவர்களும் தனித்திருக்க வேண்டிய **‘இத்தா’** என்னும் காலக் கடமையை முடித்து விட்டால், மூன்றாவதும் இறுதியுமான ‘தலாக்’ என்னும் விவாகரத்து அறிவிப்புக்கு முன்னதாக அவர்கள் இருவரும் தங்களுக்குள் ஒத்துப்போய், கணவனும் மனைவியுமாக மீண்டும் வாழ சுதந்திரமாக முடிவு செய்து கொண்டால், அம் முடிவைத் தடுக்காதீர்கள். அல்லாவின் மீதும், இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் இதன் மூலம் எச்சரிக்கப் படுகிறார்கள். இதுவே உங்களுக்கு அதிகப் பயனளிக்கக் கூடியதாகவும், புனிதமானதாகவும் இருக்கிறது. எல்லாவற்றையும் அறியக் கூடியவனாக அல்லாவே இருக்கிறான்; நீங்கள் அல்ல. 232

மேலும், விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண், தன் குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டிய காலத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என கணவன் விரும்பினால், அத்தகைய தாய்மார்கள்

தங்கள் குழந்தைகளுக்கு இரண்டாண்டுகள் வரை பால் கொடுக்க வேண்டும். அந்த இரண்டாண்டுக் காலத்தில், அந்தத் தாய்க்குரிய உணவு மற்றும் உடைக்கான செலவுகளை, வழக்கத்திற்கேற்ப தந்தையே ஏற்க வேண்டும். எந்த ஒரு ஆத்மாவின் மீதும் அது சுமக்கக் கூடிய அளவுக்கு மேல் சுமையை ஏற்றக் கூடாது. எந்தத் தாயும் தன் குழந்தையின் பொருட்டுத் துன்புறுத்தப் படமாட்டாள். எந்தத் தந்தையும்கூட குழந்தையின் பொருட்டுத் துன்புறுத்தப்பட மாட்டார். மேலும், தந்தை இருந்தாலும் இல்லாவிட்டாலும், தந்தையின் வாரிசுகளுக்கும் இதே கடமை உண்டு. எனினும், பால் குடிப்பதற்குரிய இரண்டாண்டு காலத்துக்கு முன்பே பால்குடியை மறக்கடிக்க இருதரப்பும் ஒத்து முடிவு செய்து கொள்வார்களாயின், அவ்விருவர் மீதும் குற்றம் ஏதுமில்லை. குழந்தைக்குப் பால் கொடுக்க செவிலித் தாயை ஏற்படுத்தினால், அந்த செவிலித் தாய்க்கு வாக்களித்ததைக் கொடுத்து விட்டால் உங்கள்மீது குற்றமில்லை. அல்லாவிடமுள்ள உங்கள் கடமைகளில் எப்போதும் மிக எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். அல்லா நீங்கள் செய்வது அனைத்தையும் சதா பார்த்துக் கொண்டிருப்பான் என்பதை உணருங்கள். 233

மனைவியை விட்டு விட்டு, கணவன் இறந்து போனால், விதவையானவர்கள் நான்கு மாதங்களும் பத்து நாட்களுக்குமான காலத்திற்கு **'இத்தா'** என்னும் தனித்திருத்தலைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்தத் தனித்திருக்க வேண்டிய காலக் கடமை முடிந்தபின், சட்ட முறைப்படி தங்கள் காரியங்களை நடத்திக் கொள்வது தவறாகாது. அல்லா நீங்கள் செய்வது குறித்து உன்னிப்பாகக் கவனிப்பவனாக இருக்கிறான். 234

விதவைகளைப் பெண் கேட்பதோ, அல்லது அதற்கான எண்ணத்தை மனதில் கொள்வதோ குற்றமில்லை. இந்த எண்ணத்தை நீங்கள் மனத்

தளவில் ரகசியமாக வைத்திருப்பீர்கள் என்றும், இதுபற்றி தனித்திருந்தாக வேண்டிய காலக் கெடு முடிந்து, திருமண ஏற்பாட்டை முறைப் படி துவக்கும் வரை விதவைகளுடன் ரகசிய மாக வாக்குறுதி எதிலும் ஈடுபட மாட்டீர்கள் என்றும் இறைவன் நம்புகிருன். உங்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை அல்லா அறிகிருன். அதையும் புரிந்து கொள்ளுங்கள். அவனுக்கு அஞ்சி எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். அல்லா பிழை பொறுப்பவன்; சகித்துக் கொள் பவன். 235

## பிரிவு—31 பெண்களுக்கான ஏற்பாடுகள்

திருமணத்திற்குப் பின், மனைவியைத் தீண்டா மலேயே 'தலாக்' என்னும் விவாக ரத்துச் செய்ய நேர்ந்தால், அந்த விஷயத்தில், திருமணத்தின் போது வாக்களிக்கப்பட்ட மனைவிக்கான **'மகர்'** என்னும் பாதுகாப்புத் தொகைக்கு நிர்ணய ஏற்பாடு செய்யாமலிருந்தாலும் உங்கள் மீது குற்றமில்லை. ஆனல், 'தலாக்' என்னும் விவாக ரத்துச் செய்யப்பட்டவர்களுக்கு, நியதியான வழக்கப்படி என்னென்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். வசதிக்கு ஏற்ப, செல் வந்தர் அதிகமாகவும், ஏழை குறைந்த அள விலேனும் கொடுக்க வேண்டும். பொதுநலனில் அக்கரை உள்ளவர்கள் இதற்காக கணிசமாகக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள். 236

திருமணத்திற்குப் பின் மனைவியைத் தீண்டு வதற்கு முன்பே, 'தலாக்' என்னும் விவாக ரத்து செய்ய நேர்ந்து, ஆனல் விவாக ரத்துக்கு முன்பே திருமணத்தின் போது வாக்களிக்கப் பட்ட மனைவிக்கான 'மகர்' என்னும் பாது காப்புத் தொகைக்கு நிர்ணய ஏற்பாட்டைச் செய்து முடித்திருந்தால், நீங்கள் ஏற்பாடு

செய்ததில் பாதியை விவாகரத்துச் செய்யப் பட்ட மனைவிக்கு அனுமதியுங்கள். உங்களுக் குரிய மறுபாதியை அவர்களாகத் திருப்பித் தராவிடில், அல்லது திருமண ஏற்பாட்டை முடித்து வைத்தவர் பெற்றுத்தர இயலாவிடில், பெருந்தன்மையோடு அதையும் விட்டுக் கொடுத்து விடுங்கள். உங்களுடைய தாராளம் உங்க ளுடைய பக்தி விசுவாசத்துக்கு அணி செய் கிறது என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் செய்வதை அல்லா நிச்சயமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான். 237

தொழுகையைக் கடைப்பிடியுங்கள். ஐந்து நேரத் தொழுகைகளுள் மத்தியத் தொழு கையான மாலை நேரத் தொழுகையை சிறப்பாகப் பேணுங்கள். இறைவன் முன்னே தொழும்போது பக்தி சிரத்தையுடன் நில்லுங்கள். 238

எதிரியின் ஆபத்துள்ள இடங்களில் கால் நடை யாகவோ, அல்லது பயணம் செய்யும் வாகனத் திலிருந்தபடியோ, பிரார்த்தனை செய்யுங்கள். பாதுகாப்பான இடத்தை அடைந்தபின், முன்பு உங்களுக்குத் தெரியாதிருந்து, பின் இறைவனால் உங்களுக்குக் கற்பிக்கப்பட்ட முறைப்படி அல் லாவைத் தியானியுங்கள். 239

மனைவியரை விட்டு இறந்து போகின்றவர்கள், தனது மரண உயிலில், அவர்களுக்கு ஓராண்டு காலத்துக்கான ஜீவனாம்சத்துக்கும், குடியிருப் புக்கும் ஏற்பாடு செய்து வையுங்கள். ஆனால், அந்த விதவைகள், தாங்களாகவே முன் கூறிய முறைப்படி புறப்பட்டுச் சென்று, தங்களுக் கென மறுமண காரியங்களை நியாயப்படி செய்து கொண்டால், உங்கள் மீது குற்றமில்லை. அல்லா விவேகமானவன்; வல்லமை மிக்கவன். 240

விவாக ரத்துச் செய்யப்பட்டவர்களுக்கு தாராள மாக ஜீவனாம்சம் ஏற்பாடு செய்வது நல்லோர் களின் கடமையாகும். 241

நீங்கள் புரிந்து கொள்வதற்காக வேண்டி, அல்லா இத் தூதுச்செய்திகளை அருளியிருக்கிறான். 242

## பிரிவு—32 சத்தியத்துக்கான போராட்டம்

ஏ, திருத்தூதரே! மரணபயத்தால் பீடிக்கப்பட்டு, யூதர்கள் தங்கள் இல்லங்களை விட்டு ஆயிரக் கணக்கில் வெளியேறியதை நீர் நினைத்துப் பார்த் தீரா? அப்போது ''நீங்கள் அழிந்து போங்கள்'' என அல்லா அவர்களுக்குச் சாபமிட்டான். பின்னர் அவர்களுக்கு உயிரை மீட்டும் தந்தான். அல்லா கருணை மிக்கவனாகவே இருக்கிறான். ஆனால் பெரும்பாலான மக்கள் நன்றியில்லாதவர்களே!
243

இன்னும் அல்லாவின் வழியில் நின்று போர் புரியுங்கள். அவன் எல்லாவற்றையும் கேட் கின்றவன், அறிகின்றவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். 244

அல்லாவுக்கு உயர்ந்த கொடை கொடுக்கக் கூடியவர் எவரோ அவருக்கே அதை அல்லா இரட்டிப்பாக்கித் தருவான். பன்மடங்காக்கியும் வைப்பான். உங்களுக்குத் தேவைக் கேற்பவோ, அதிகமாகவோ அல்லாவே தருகிறான். நீங்கள் அவனிடமே மீண்டும் செல்ல இருப்பவர்கள். 245

ஏ, திருத்தூதரே! மூஸாவுக்குப் பிறகு தோன்றிய இஸ்ரேலிய மக்களின் தலைவர்களை நீர் நினைத்துப் பார்க்கவில்லையா? ''அல்லாவின் பாதையில் போர் புரிய எங்களுக்கு ஒரு அரசனை ஏற்படுத்திக் கொடுங்கள்'' என அவர்கள் தங்களின் திருத் தூதர் ஒருவரிடம் வேண்டினார்கள். அதற்கு அந்தத் திருத்தூதர் ''உங்கள் மீது போர் திணிக்கப் பட்டாலும், நீங்கள் போர் புரியாதிருந்தால் போதுமே'' என்றார். இதற்கு அவர்கள், ''அல் லாவின் பாதையில் நின்று போர் புரியாதிருக்க எங்களுக்கு என்ன காரணமிருக்கிறது?'' என் றார்கள். மேலும், ''நாங்கள் எங்கள் இல்லங்களை

விட்டும் பிள்ளைகளை விட்டும் பிரித்து வெளி யேற்றப்பட்டிருக்கிறோம்'' என்றார்கள். ஆனால், அவர்களின்மீது போர் கடமையாக்கப்பட்டபோது, ஒருசிலரைத் தவிர மற்றவர்கள் புறக்கணித்துத் திரும்பி விட்டார்கள். அல்லா தவறானவர்களை அறிந்தே இருக்கிறான். 246

மேலும், அவர்களின் திருத்தூதர், ''உங்களுக்கு அல்லா தாலூதை அரசனாக ஆக்கி வைத்துள் ளான்'' என்றார். அதற்கு அவர்கள், ''அவரை விட நாங்களே அரச பதவிக்கு அதிகம் பொருத்த மானவர்களாக இருக்கும் போது, அவர் எப்படி எங்களுக்கு அரசனாக இருக்க முடியும்? அவரிடம் அதிகமாகச் செல்வம் கூட இல்லையே'' என்றார் கள். அதற்கு அவர், ''அல்லா அவரைத்தான் உங்கள் அரசனாகத் தேர்ந்தெடுத்துள்ளான். ஆழ்ந்த அறிவிலும், தோள் வலிவிலும், அவர் நிகரற்றவர். அல்லா, தான் விரும்பியவருக்கே அரச பதவியை அளிக்கிறான். அல்லா மிகவும் உன்னதமான கொடை வள்ளல்; எல்லாம் அறிந்தவன்'' என்றார். அவர்களின் திருத்தூதர் அவர்களுக்கு மேலும் சொன்னார்: ''அவருடைய அரச அதிகாரத்துக்கான அடையாளம் உங் களிடம் உள்ள அத்தாட்சிப் பேழையில் வரு கிறது. அதில் உங்கள் இறைவனின் ஆசியும், மூஸாவையும், ஹாரூனையும் பின்பற்றியவர் களின் நல்லடையாளங்களும் இருக்கின்றன. வானவர்கள் அதனைச் சுமந்து வருவார்கள். நீங்கள் இறை நம்பிக்கை கொண்டவர்களாக இருந் தால், நிச்சயமாக அதில் உங்களுக்குச் சான்று இருக்கிறது. 248

பிரிவு—33

## சத்தியப் போராட்டம்—2

தாலூது தன் படைகளைத் திரட்டிக்கொண்டு புறப்பட்ட பொழுது கூறினார்: ''அல்லா, நீங்கள்

ஒரு நதியை அடைந்ததும் உங்களைச் சோதிப்பான். யார் அதிலிருந்து அதிகமாக நீரெடுத்து அருந்துகிருரோ, அவர் என்னைச் சேர்ந்தவர் அல்ல. யார் ஒரு சிரங்கைக்கு மேல் அருந்தவில்லையோ, அவர்தான் என்னைச் சார்ந்தவர் ஆவர்,'' என்று. ஆனல் அவர்களில் ஒருசிலரைத் தவிர, மற்றவர்களெல்லாம் அந் நதியிலிருந்து அதிகமாகத்தான் பருகினுர்கள். பின்னர் அவரும், அவர் மீது நம்பிக்கை கொண்டவர்களும் அந் நதியைக் கடந்த போது, ''இன்று 'ஜாலூத்'துடனும் அவனது படைகளுடனும் போர் புரிய எங்களுக்குச் சக்தியில்லை'' என்று அதிக நீரருந்தியவர்கள் கூறினுர்கள். ''இறைவனை மீண்டும் சந்திப்போம் என நிச்சயமாக இறை நம்பிக்கை கொண்டிருந்தவர்கள், எவ்வளவு சிறு எண்ணிக்கையினராக அவர்கள் இருந்த போதிலும், எத்தனையோ முறை அல்லாவின் அனுமதியுடன் பெரும் எண்ணிக்கையுள்ள படைகளை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கின்றனர். அல்லா பொறுமையாளர்களுடன்தான் இருக்கிருன்'' என்று அவர் கூறினுர். 249

'ஜாலூதை'யும் அவனுடைய படையையும் எதிர்த்துச் சென்ற பொழுது, ''எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையைத் தந்தருள்வாய். எங்கள் காலடிகளை உறுதியாக்கி வைத்து, சத்தியத்தை நிராகரித்து விட்டவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவுவாய்'' என்று வேண்டினுர்கள். 250

அல்லாவின் ஆசியுடன் பகைவர்களை அவர்கள் விரட்டியடித்து விட்டார்கள். மேலும், தாவூது, ஜாலூதை வெட்டி வீழ்த்தினுர். அவருக்கு அல்லா அரசாங்கத்தையும், அதிக விவேகத்தையும் அளித்து, தான் விரும்பியபடி அனைத்தையும் அவருக்குக் கற்றும் கொடுத்தான். சில மனிதர்களை, வேறுசில மனிதர்களைக் கொண்டு அல்லா தடுத்து விலக்கி வைக்கா விட்டால், இந்த பூமி தாறுமாருகி விடும். ஆனல் அல்லா இந்த உலகில் உள்ள எல்லா மக்களிடத்தும் கருணை மிக்கவனுகவே இருக்கிருன். 251

ஏ, திருத்தூதரே! இவை அல்லாவின் தூதுச்
செய்திகளே. இவற்றை சத்திய மறையிலிருந்து
உமக்குச் சாட்சியமாக ஓதிக் காட்டுகிறோம்.
நீர் நிச்சயமாக நம்மால் அனுப்பப்பட்ட திருத்
தூதர்களுள் ஒருவரே! 252

(இரண்டாம் பாகம் நிறைவு பெறுகிறது)

13
9-67

# References

1. The Holy Qur-an, Text, Translation and commentory—*By ABDUL YUSUF ALI* Lahore, 1968 - under supervision of DAR-AL ARABIA, Beiruit—Labanon.

2. The Meaning of The Glorious Koran —An explanatory Translation—*By MOHAMMED MARMADUKE PICKTHALL* — Mentor Book, USA.

3. Introduction to The Study of The Qur'an—*By ABUL A'LA MAUDUDI*— Markazi Maktaba Jamaat-e-Islami Hind, Delhi-6.

4. Kur-an Majith—Meaning and Commentory in Tamil — *By ALHAJ B. DAWOODSHA SAHIB.* B. A & N. B. *ABDUL JABBAR SAHIB, B. A*—Darul Islam, Madras-5.

5. Anvarul Kur-an — Tesxt translation and commentory in Tamil, — *By MOULAVI HAABIS E. M. ABDUL RAHMAN, NOORIYA BAJIL BAKAVI, TENKASI*—Adam Trust, Koothanallur-1955.

6. 'Kur-an Bothanaikal (Tamil) — *SYED IBRAHIM,* Valarmathi Pathippagam, Tiruchirapalli.

7. 'Thirumarayin Thotruvai' (Tamil), *SYED IBRAHIM,* Valarmathi Pathippagam, Tiruchirappalli.

8. Thean Thamzhil Thiru Qur-an — A Hannan under the supervision of *MOWLAVI MOHAMED SULTAN BAJIL DEVBANTH — M. RAJ MOHAMED* 189, Palakarai, Thiruchi-8.

Gnanaratham January 1978. Reg.No. M-8623.

பிப்ரவரி 1-ல் வெளிவரும்

# இஸ்லாமிய திருமறை

## திருகுர்-ஆன்-

-விளக்க உரை

# மூன்றும்-நான்காம்

## பாகங்கள்

உள்ளடக்கங்கள் சில:

★ சமயநெறி நிர்பந்தித்து வராது.

★ சகலத்தையும் கொடுத்தேனும்-
-சத்தியத்தைக் காத்திடு.

★ எல்லாச் சமயங்களுக்கும் ஒரே இறைவனே அடிப்படை.

★ ஈஸா (இயேசு) வின் கதை.

★ விலக்கப்பட்ட திருமண உறவுகள்.

மற்றும் பல

விலை ரூ 1·50